இலங்கையில் செய்தி இதழாகப் பதிவுசெய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 2/50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 391 ★ 1989 மார்ச் 03 வெள்ளிக்கிழமை

உள்ளே:


● 2ம் பக்கம் — தோழர். குணபாலவின் நினைவு நீடூழி வாழ்க!

● 3ம் பக்கம் — நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் முன் நோக்குகளின் தீர்மாணம்.

● 6ம் பக்கம் — சோவியத் யூனியனில் நிகழ்வதென்ன?


# யூ. என். பி. வர்க்க யுத்த தயாரிப்புக்களை முடுக்கி விட்டுள்ளது.

## அரசாங்கத்துக்கும்—பாசிஸ்டுகளுக்கும் எதிராக

## தொழிலாள வர்க்கப் போராட்டத்தை தயார் செய்!

யூ. என். பி: அரசாங்கத்துக்கும் பாசிஸ்டுகளுக்கும் எதிரான தீர்க்கமான வர்க்கப் போராட்டங்களுக்கு தயாராகுங்கள்! பொதுத் தேர்தலின் முடிவுடன் வளர்ச்சி கண்டு வரும் நிலைமைக்கு முகம் கொடுக்கும் பொருட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்து-கு விடுக்கும் தீர்க்கமான செய்தி அதுவே.

ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத்தேர்தலிலும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய தன் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவின் தலைமையிலான யூ. என்.பி. அரசாங்கம் தொழிலாள வர்க்கம், தமிழ் தேசிய இனம், ஏழை மக்கள் மீது முன்னெருபோதும் இல்லாத தாக்குதலைத் தொடுக்க உள்ளது. மறுபுறத்தில் ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளி வர்க்கத்தினதும் நலன்களைக் காக்கும் பொருட்டு அரச அதிகாரத்தை அபகரித்துக் கொள்ள முயன்றுவரும் மக்கள் விடுதலை முன்னணியின் புதிய அலவிலான பாசிச தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

2. ஜனாதிபதி தேர்தல் பொதுத் தேர்தல் முடிவுகள் இலங்கையில் வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகளின் நிசத் தன்மையை உக்கிரமான ஆதாள பாதாளத்தை காட்டவில்லை. ஜனாதிபதி தேர்தலில் யூ.என்.பி. யினதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் இரத்தக் களரிகளுக்கு மத்தியில் வாக்களித்தோரின் எண்ணிக்கை மொத்த வாக்காளர் தொகையில் 63.6% மாகும். அதிலும் கணிசமான அளவு வாக்குக்கள் கள்ள வாக்குக்களாக இருக்க அதில் 27.4%ஐ ஜனாதிபதி பிரேமதாச பெற்றார். பொதுத் தேர்தலில் மொத்த வாக்குக்களில் 30%ஐ பெற்ற யூ.என்.பி. அரசாங்கம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. சமசமாஜ-கம்யூனிச-நவ சமசமாஜ தலைவர்கள் முதலாளித்துவ சிறீ லங்கா மக்கள் கட்சியுடன் ஏற்படுத்திய கூட்டு [illegible]க்கு 1% வாக்குக்க[illegible]தது. தோட்டத் தொழிலாளர்களை முழுமனே காட்டிக் கொடுத்துள்ள இ.தொ.கா. தலைமை சுமார் 4 இலட்சம் அங்கத்தினர்களைக் கொண்டுள்ள போதிலும் ஒரு இடத்தைக் கூடப் பெறவில்லை.

யூ.என்.பி. இரத்தப் புடையன்களைப் போலவே அதன் பின்னால் வயிறளக்கும் புத்தி ஜீவிகள் எனப்படுவோர் இலங்கையில் இரட்டைமுறை 'ஜனநாயகம்' பலன் தந்துள்ளதாகக் கூறிக்கொண்டு கொடிய சர்வாதிகாரத் தாக்குதல்களுக்கு ஆயத்தமாகின்றனர்;

ஜனாதிபதி தேர்தலிலும் பலாத்காரமான முறையில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ள இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் முக்கியமான கும்பல் குவிந்துள்ள யூ. என். பி. செயற்பட்டமையானது, எந்தவிதமான முதலாளித்துவ எதிர்க்கட்சிக்கோ அல்லது எதுவிதமான ஈடாட்டங்களுக்கோ இடம் வைக்காமல் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை காக்கும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தையும் தமிழ் தேசிய இனத்தையும் ஏழை விவசாயிகளையும் பலாத்காரமாக ஒடுக்கி நசுக்கி முன்செல்ல வேண்டும் என அவர்கள் தீர்மானித்துள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது.

### பூச்சுக்கள்

பாராளுமன்ற விவரதங்களும் மற்றும் 'ஜனநாயக' பூச்சுக்களும், கொடிய சர்வாதிகார ஆட்சிக்கு மாறும் தயாரிப்புக்களின் போது பொதுமக்களின் கண்களில் மண்வீசும் நடவடிக்கைகளாகும், தொழிலாளர்களும், ஏழைகளும் வர்க்க எதிரியின் தாக்குதல்களை எதிர்த்து எந்தவிதமான நடவடிக்கையிலும் ஈடுபட வழி காட்டாமல, எதிரிக்கு வாய்ப்பான விதத்தில் தேர்தலின் உள்ளே தொழிற்பட்டு விட்டு யூ.என்.பி. ஆட்சிப் பீடம் ஏறியதையும் தமது வாக்குக்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டு, தொழிலாள ஏழை மக்கள் எது

● 2ம் பக்கம் பார்க்க

## பு. க. க.வின் ஐக்கிய முன்னணி அழைப்புக்கு

# அனைத்துலக, தேசிய ஆதரவு!

இலங்கை தொழிலாள வர்க்கத்தினை யூ.என்.பி. அரசாங்கத்தின் இராணுவ ஒடுக்குமுறைகளில் இருந்தும் பாசிச மக்கள் விடுதலை முன்னணியின் தாக்குதல்களில் இருந்தும் காக்கும் பொருட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுத்த ஐக்கிய முன்னணி அழைப்புக்கு அனைத்துலக, தேசிய தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஆதரவு கிடைத்து வருகின்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த ஐக்கிய முன்னணி பிரச்சார இயக்கத்துக்கு பலம் சேர்க்கும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலிய பகுதியான சோசலிஸ்ட் லேபர் லீக்' (S.L.L.) மேற்கொண்ட இயக்கம் அவுஸ்திரேலிய தொழிற்சங்க இயக்கத்தின் பேராதரவினைப் பெற்றுள்ளது.

பெப்ரவரி 10ம் திகதி நடைபெற்ற அவுஸ்திரேலிய தொழிற் சங்கங்களின் பேராளர் மகாநாட்டின் (A.C,T.U.) எதிரில் S.L.L. அங்கத்தினர்கள் அதன் செயலாளர் தோழர் நிக் பீம்கின் தலைமையில் பிரச்சாரம் செய்தனர். S.L.L.ஆல் A C.T.U.வின் செயலாளருக்கு வரையப்பட்ட கடிதத்தில் S.L L. பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: ''தொழிலாளர் இயக்கத்தை பாசிசத்தினதும் அரசினதும் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் பொருட்டு இலங்கைத் தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஐக்கிய முன்னணியை அமைக்கும்படிகோரி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுத்துள்ள அழைப்புக்கு A.C,T.U. நிறைவேற்று சபைகளதும் சமஷ்டி தொழிற் சங்க சம்மேளனங்களினதும் ஆதரவினை கோருவதென சோசலிஸ்ட் லேபர் லீக்கின் சார்பில் இக் கடிதத்தினை எழுதுகின்றேன்.

● 8ம் பக்கம் பார்க்க



செனட்டர் ஒல்வ் சகாரோவ்

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!

# தோழர் குணபாலவின் நினைவு நீடூழி வாழ்க

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவரும் பேராதனை பல்கலைக் கழக ஐக்கிய சிற்றூழியர் சங்க செயற்குழு உறுப்பினருமான தோழர். டீ. எச். குணபால மக்கள் விடுதலை முன்னணியின் பாசிச கொலைகார கும்பலினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

டிசம்பர் 23ம் திகதி மாலை 8 மணியளவில் தோழர். குணபால கொலையாளிகளால் இரு தடவை நெஞ்சில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

1970பதாம் ஆண்டளவில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்த தோழர். குணபால கண்டி பிராந்தியத்தில் தொழிற்பட்டு வந்தார். அவரின் உறுதியான போராட்டத்தை இரு தலைமுறையைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவரும், தொழிலாளர்களும் நன்கறிவர்.

தோழர். குணபா வுக்கு இறுதி மரியாதை செலுத்த வந்த ஒரு முதிய கிராமத்தவ , மரணச் சடங்கில் திரண்டிருந்தவர்களுக்கு கூறியது இது தான்: ''எவ்வளவு பெறுமதியான ஆள் கொல்லப்பட்டு விட்டார். அவர் யூ.என்.பி. யை எதிர்த்தவர். அவர் சி.ல. சு.க. முதல் ஜே.வி.பி.யையும் இந்திய-இலங்கை உடன்படிக்கையும், சமசமாஜ, கம்யூனிச கட்சிகளின் காட்டிக் கொடுப்புக்களையும் எதிர்த்தவர்''.

தோழர். குணபால, பாசிச இயக்கத்தை தனிமைப்படுத்தி நசுக்கும் முதல் நடவடிக்கையாக தொழிலாள வர்க்க அமைப்புக்களைக் கொண்ட ஒரு ஐக்கிய முன்னணியை நிறுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பிரச்சாரத்தினை முன்னெடுத்து வந்த வேளையில் பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இப் படுகொலைக்கு சில நாட்களுக்கு முன்னர் தோழர். குணபால, பல்கலைக் கழக தொழிலாளர்கள் மத்தியில் பு.க க.வினால் பிரசுரிக்கப்பட்ட இரண்டு துண்டுப் பிரசுரங்களை வினியோகித்தார். ஒன்று பாசிச இயக்கத்துக்கும் யூ.என்.பி. இராணுவ தாக்குதலுக்கும் எதிராக தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு விடுத்தது. மற்றைய பிரசுரம் இதே பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்ட தோழர். ஆர். ஏ. பிட்டவெல பற்றியது.

இந்நடவடிக்கைகள் நீண்ட நெடுங்காலமாக பல்கலைக் கழக தொழிலாளர்களதும், தொழிலாள வர்க்கத்தினதும் அடிப்படை உரிமைகளையும் முக்கிய தொழிற் சங்கங்களையும், தொழிலாள வர்க்க அமைப்புக்களையும் பேண தோழர். குணபால தொடுத்த போராட்டத்தின் விளைவாகும்.

சமீபத்தில் ஜே.வி.பி. பாசிஸ்டுகள் பொது வேலைநிறுத்தம் என்ற பேரில் ஒழுங்கு செய்த தயாரிப்புக்களில் தொழிற்சங்கங்களை உடைக்கவும், தொழிலாளர் அமைப்புக்களை தமது பாசிச பல்கலைக் கழக நடவடிக்கை கமிட்டியின் ஆணையின் கீழ் கொணரவும் முயன்றனர் ஆனால் தோழர். குணபால பு. க.க வின் வழி காட்டலின் கீழ் இதற்கு எதிராக செயற்பட்டார். சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜிஸ்டுகளும் மற்றும் மத்தியவாதிகளும் தமது அரசியல் வங்குரோத்தினையும் கோழைத்தனத்தினையும் வெளிக்காட்டிய வேளையில் தோழர். குணபால பேரணிகளை பாசிஸ்டுகளுக்கு எதிராக அணிதிரட்டும் அச்சாணியாக விளங்கினார்.

நவம்பர் 7ம் திகதியின் பின்னர் ஜே. வி. பி. ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டங்கள், மதியல்களுக்கு மத்தியிலும் துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்களுக்கு மத்தியிலும் தொழிற் சங்கங்களின் சுயாதீனத்தைப் பாதுகாக்க அவர் நடாத்திய போராட்டம் உண்மையில் தைரியமிக்கது. பாட்டாளி வர்க்க வேலைத்திட்டத்தையும் வர்க்க அமைப்புக்களையும் காக்க அவர் தொடுத்த சமரசமற்ற போராட்டம் தோழர். குணபாலவை ஜே. வி, பி. யின் வெறுப்புக்களுக்கு இலக்காக்கிற்று.

தோழர். குணபால தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்கும், தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமைக்கும் – பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தின் அடிப்படையில் உறுதியாக போராடி வந்தார்.

'மலைநாட்டு வீர கெப்பிட்டிபொல ஆயுத படை' என்ற [illegible] பேர் கொண்ட ஒரு [illegible] கும்பலே இந்தக் கொலைக்கு உரிமை கோரியதோடு இரகசியமாக ஒரு குற்றப் பத்திரத்தையும் வெளியிட்டது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமோ அல்லது வேறு எந்தவொரு தொழிலாள வர்க்க இயக்கமோ பாசிஸ்டுகளின் குற்றச் சாட்டுக்களுக்கு அரசியல் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டதில்லை. பாசிஸ்டுகளுக்கு தொழிலாள வர்க்கம் அளிக்கக் கூடிய ஒரே பதில் இந்த பாசிஸ்டுகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தையும், ஏழைகளையும் அணிதிரட்டி அதனை நசுக்குவதே.

இந்தப் பணியை நாம் ஐக்கிய முன்னணியை நிறுவ தொடுத்துள்ள பிரச்சாரத்தின மூலம் நிறைவேற்றுவோம் என சபதம் பூணும் அதேவேளையில் நாம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவையும் அதன் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் கட்டி எழுப்புவதன் மூலம் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தினை வென்றெடுக்கும் தலைமையை கட்டி எழுப்ப சபதம் பூணுவோமாக. அது தோழர். குணபாலவுக்கும் மற்று தியாகிகளுக்கும் உரிய நினைவுச் சின்னமாக நிச்சயம் அமையும்.



ஜே. வி. பி. யினரால் படுகொலை செய்யப்பட்ட தோழர். குணபால

# யூஎன்பி வர்க்க யுத்த...

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

வுமே செய்ய முடியாத ஆதாள பாதாளத்தில் வீழ்ந்து போயுள்ளதாக அறிக்கை வெளியிட சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ, இ.தோ.கா. தலைவர்களுக்கு இடமளிக்கவே கூடாது.

யூ.என்.பி. அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் வழிகாட்டலின் பேரில் வட-கீழ் மாகாணங்களை ஆக்கிரமித்துக் கொள்ள அழைத்த இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிரான தமிழ் தேசிய இனத்தினன் இரத்தக் களரிக்கு மத்தியிலும் தமது உறுதியானதும் நிரந்தரமானதுமான எதிர்ப்பினை காட்டி வருகின்றனர். மக்கள் விடுதலை முன்னணியின் பாசிஸ்டுகள் தொழிலாளர் அமைப்புக்களுக்கும், வேலைத் தலங்களில் தொழிலாளர்களுக்கும் எதிராக கொலை மிரட்டல்களை விடுத்து பாய்ந்து விழுந்தது தமிழ் தேசிய இனத்தினரின் எதிர்ப்புக்கும், 1988ன் ஆரம்பத்தில் இருந்து தொழிலாளர் போராட்டம் வளர்ச்சி கண்ட நிலையிலாகும்.

ஜயவர்தன அரசாங்கம், பாசிச ஆத்திரமூட்டல்களுக்கு எதிராகும் சாட்டில் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக அரச தாக்குதலை உக்கிரமாக்கியது. இந்த அபிவிருத்தி உள்நாட்டு யுத்தத்தின் முதல்வெடி ஆகிற்று. சகல நிபந்தனைகளின் அபிவிருத்தியும் வருமாறு. பிரேமதாச அரசாங்கத்தின் கீழ் இந்தக் சக்திகள் இடையே மோதுதல் வளர்ச்சி கண்டது. தொழிலாள வர்க்கம் தமிழ் தேசிய இனம், கிராமப் புற விவசாயிகளுடன் கூட்டுச் சேர்ந்து வர்க்க எதிரிக்கு எதிராக சோவியத் அமைப்புக்களை கட்டி எழுப்பிக் கொண்டு ஆயுதம் தாங்கிய ஆட்சியை கைப்பற்ற தயாராக வேண்டும். இல்லையேல அரச தாக்குதலுக்கும் பாசிச தாக்குதலுக்கும் பலியாக நேரிடும்,

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய அமைப்பு மோசமான நெருக்கடியில் மூழ்கிப் போகும் நிலையிலும் அதன் நெருக்குவாரத்தின் கீழ் இலங்கை முதலாளித்துவ அமைப்பினதும் முதலாளித்துவ வர்க்க ஆட்சி முன்னெரு போதும் இல்லாத முறையில் உக்கிரம் கண்டுள்ள நிலையிலேயே ஜனாதிபதி பிரேமதாசவின் கீழான யூ.என்.பி. அரசாங்கத்தின் ஆட்சி தொடங்கியுள்ளது உலக ஏகாதிபத்திய அமைப்பின் முரண்பாடுகள் உக்கிரம கண்டுள்ளதால் அமெரிக்க ஐரோப்பிய, ஜப்பானிய ஆளும் வர்க்கங்கள் முகாம்களாக பிளவுண்டு எதிர் உலக பொருளாதாரத்தின் ஆளுமைக்காக போரிட்டு வருகின்றன, இதனுடன் தொடர்புபட்ட பந்தோபஸ்துவாதத்தில் சந்தை வெட்டு, பொருளாதாரத்தினை நன்கு விரிவுபடுத்தி இலாப பூமியை கொள்ளையடிப்பு, புதிய கடன் வழங்குதலை வெட்டுதல் வழங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த கொடிய நிபந்தனைகளை விதித்தல் முதலான அரைக் காலனிகளை கசக்கிப் பிழியும் ஏகாதிபத்திய கொள்கைகள் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன.

## கசக்கிப் பிழிவு

இலங்கை சம்பந்தமான இக் கசக்கிப் பிழிவு தொடர்பாக ஏகாதிபத்திய முதலீட்டாளர்களின் உளவுச் சேவை 'டஸ்லைஸ் இன்டர்நஷனல்' சஞ்சிகை கூறியதாவது: '...சர்வதேச நாணய நிதியத்தினதும் கடன் வழங்கும் நாடுகளதும் சரியான பக்கத்தில் நிற்பது நாட்டுக்கு அவசியமானால் மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் தவிர்ந்த அரசாங்கத்தின் உஜார் செலவினங்களை ஒருபுறம் தளள வேண்டும். அது மட்டுமன்றி இலங்கையின் முக்கிய வர்த்தக சகாக்களான அமெரிக்காவின் வெளியேற்றங்களும் மத்திய கிழக்கு பொருளாதார வீழ்ச்சி நிலையையும் நாட்டின் ஏற்றுமதி அபிவிருத்திக்கு தாக்கம் ஏற்படுத்தும்...

"...1980 எவ்வாறெனினும் சென்மதி நிலுவை மேலும் மோசமடையலாம். அமெரிக்காவுக்கும் பலவீனமான கேள்விமிக்க வர்த்தகங்கள் இடையேயான வர்த்தகம் கட்டுப்படுத்தப்படுவதோடு அந்த சந்தைகளில் வளரும் பந்தோபஸ்து வாதம், சிறப்பாக துணி வகை துறைக்கு தாக்குதல் கொடுக்கும்...'' (''பிஸ்னஸ் இன்டர்நஷனல்'' – 1988 நவம்பர்)

1987ல் பொருளாகாரத்தின் வளர்ச்சி வீதம் 1.5%மாக வீழ்ச்சி கண்டது. 1988ல் விவசாய உற்பத்தி முன்னைய ஆண்டின் மட்டத்தினைவிட 6%ஆல் வீழ்ச்சி கண்டதாக பெப்ரவரியில் (1989) அறிவிக்கப்பட்டது வெளிநாட்டு கடனின் பேரில் ஏற்றுமதி வருமானத்தில் 30% ஏகாதிபத்திய வங்கியாளர்களுக்கு தாரை வார்க்க வேண்டும் 1988 அக்டோபரில் வர்த்தக பற்றுக்குறை

7ம் பக்கம் பார்க்க

# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்னோக்குகளின் தீர்மானம்!

[ சென்ற இதழ் தொடர்ச்சி ]

32. சில்லி தொழிலாள வர்க்கத்தின் தோல்விக்கு சமூக ஜனநாயக வாதிகளின் பங்களிப்பானது, உலகத்தின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் அவர்களின் பங்குடன் இசைந்ததாக இருந்தது. தனியாகவோ அல்லது ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்புடனோ இப்படியான ஆழமான அரசியல் பொருளாதார நெருக்கடி வருட காலங்களில் சமூக ஜனநாயக வாதிகள், ஏகாதிபத்தியத்தின் மிக அடிப்படையான நலன்களுக்கு சேவை செய்தனர்: இந்த எதிர்ப்புரட்சிகர பாத்திரம் அதன் மிக சரியான வெளிப்பாட்டை ஜெர்மனியில்—பிராண்டின், போர்ச்சுகலில்—சோரஸ்ஸின், ஸ்பெயினில்—கோன்சாலேயின், ஆஸ்திரேலியாவில் — விட்லெமின் (அவரின் ஆபீசிலிருந்து அவரின் இராஜினாமாவை ஏற்றுக்கொண்டு-கவர்னர் ஜெனரலின் சதிக்கெதிரான தொழிலாள வர்க்க இயக்கத்தைக் தடம்புரளச் செய்தார்) சில்லியில்—அலெண்டேயின் கொள்கைகளிலும் எடுத்துக் காட்டியது.

## நான்காம் அகிலமும் சந்தர்ப்பவாதமும்

33. ஸ்டாலினிஸ்டுகளும் சமூக ஜனநாயகவாதிகளும் தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்ததை குற்றம் சாட்டுவது எவ்வாறுயினும் போதுமானதல்ல. கேள்வி எழுப்பப்பட வேண்டும்: இந்தக் காலத்தில் நான்காம் அகிலத்தின் பங்கு என்ன? ஏன் அது தொழிலாள வர்க்கத்தின் தலைமையை ஸ்டாலினிஸ்டுகளிடமிருந்தும் சமூக ஜனநாயக வாதிகளிடம் இருந்தும் பிடுங்கி எடுத்து அதனை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியவில்லை?

34: இந்தக் கேள்விக்கான பதில் 1953-ல் இருந்து நான்காம் அகிலத்தின் வரலாற்றின் ஆய்வில் தங்கியிருக்கிறது. அப்படியான ஒரு ஆய்வு காட்டுவது என்னவென்றால், மே-ஜூன் 1968-ல் பிரான்சிய பொது வேலை நிறுத்தம் வெடித்தெழுவதற்கு முன்னைய 15 வருட காலங்களில் நான்காம் அகிலம் பப்லோவாத சந்தர்ப்பவாத வளர்ச்சியினால், மிக மோசமாக பல வீனப் படுத்தப்பட்டிருந்தது.

35. 1951-ன் ஆரம்பத்திலேயே மூன்றுவது உலக மாநாட்டில், அப்பொழுது நான்காம் அகிலத்தின் செயலாளராக இருந்த பப்லோ ஒரு முன்னோக்கை முன் வைத்தார்: அது ஸ்டாலினிசத்தின் மாற்ற முடியாத எதிர்ப்புரட்சித்தன்மை பற்றிய ட்ரொட்ஸ்கியின் அடிப்படை மதிப்பீட்டுக்கு சவால் விட்டது மட்டுமல்லாமல், அதன் இடத்தில் அதிகாரத்துவத்தின் சுயசீர்திருத்தம் எனும் பல இடங்களில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட தத்துவத்தை முன் வைத்தது: அவரின் நெருங்கிய கூட்டாளியான ஏர்னஸ்ட் மண்டெலின் ஆதரவுடன் அவர் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான தலைமைப் பங்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு மத்திய, உலக புரட்சிகர மூலோபாயத்தை நிராகரிக்கும்படி பிரேரித்தார், பதிலாக, அவர் நிலவுகின்ற தேசிய நிலைமைகளினால் நிர்ணயிக்கப்பட்ட, சந்தர்ப்பவாதத் தந்திரங்களினால் வழிகாட்டப்பட்ட, தேசியக் கட்சிகளின் ஒரு கூட்டாக நான்காம் அகிலத்தை உடைக்க செயல்பட்டார். நடைமுறையில் பப்லோவின் முன்னோக்கு ஒரு குறிப்பிட்ட நாட்டில் தொழிலாள இயக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய எந்தவொரு அரசியல் சக்திகளுக்கும்—ஸ்டாலினிச, சமூக ஜனநாயக முதலாளித்துவ தேசியவாத அல்லது குட்டி முதலாளித்துவ தீவிரவாத சக்திகளுக்கு—நான்காம் அகிலத்தின் பகுதிகளை அரசியல் ரீதியாக கீழ்ப்படியச் செய்வதையே அர்த்தப்படுத்தியது. "அனைத்து ஸ்தாபன வழிப்பட்ட சிந்தித்தல்களை, அது சம்பிரதாய சுதந்திரமாகவோ அல்லது வேறுவிதமாகவோ இருப்பினும் பரந்த இயக்கத்தினுள் அது ஒவ்வொரு நாட்டினுள்ளும் அதனை வெளிப்படுத்துகிறவாறு உண்மையான ஒருங்கிணைப்புக்கு அல்லது இந்த இயக்கத்தினுள் செல்வாக்கு செலுத்தப் படக்கூடிய ஒரு முக்கியமான நீரோட்டத்தினுள் ஒருங்கிணைக்கப்படவேண்டியது அவசியம்" என பப்லோ வலியுறுத்தினர்

36. நான்காம் அகிலத்தை அரசியல் ரீதியாகவும் இயக்க ரீதியாகவும் கலைத்துவிட அச்சுறுத்திய இந்த சந்தர்ப்பவாத தோற்றத்தை தோற்கடிப்பதற்காக சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SWP) அமைப்பாளரான ஜேம்ஸ் பி. கனனின் முன் முயற்சியால் அனைத்துலகக் குழு ஆரம்பிக்கப்பட்டது: 1953 நவம்பரில் பிரிட்டனிலும் மற்றும் பிரான்சிலுமுள்ள ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் ஆதரவுடன் கனனால் வெளியிடப்பட்ட பகிரங்க கடிதம் பப்லோவாதிகளை வெளியேற்றும்படி அறை கூவியது.

37, பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்தின் புறநிலை ரீதியான விளைபயன்கள் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியில் வெளிக் கொண்டுவரப்பட்டன. சிறப்பாக கொலைபாதக சர்வாதிகாரியின் 1953-ஆம் ஆண்டு மரணத்திற்கும், பெப்ரவரி 1956-ல் குருஷ்சேவ் ஸ்டாலினின் சில குற்றங்களை அம்பலப்படுத்துவதற்குமிடையில் ஏற்பட்ட ஸ்டாலினிசத்தின் பெரும் நெருக்கடி உச்ச கட்டத்தை அடைந்தது இதையடுத்து நவம்பர் 1956-ல் ஹங்கேரியப் புரட்சி நசுக்கப்படுவதோடு பப்லோவின் அதிகாரத்துவ சுய சீர்திருத்த தத்துவமானது, முழுமையாக அம்பலப்படுத்தப்பட்டது. பப்லோவாதத்துக்கு எதிரான போராட்டமானது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், கனனும் சோசலிசத் தொழிலாளர் கட்சியும் 1957-ல் இருந்து பப்லோவாதிகளுடன் கோட்பாடற்ற முறையில் மீண்டும் இணைவதற்குத் திரும்ப ஆரம்பித்தனர். இந்த அபிவிருத்தி சோசலிசத் தொழிலாளர் கட்சியானது, என்றும் மேலும் வெளிப்படையாக ஐக்கிய அமெரிக்க அரசுகளில் உள்ள நடுத்தர வர்க்கத்தினரின் தீவிரவாதத்திற்கு அடிபணிந்தும், வழமையான பாட்டாளிவர்க்க நோக்கு நிலையைக் கைகழுவி விட்டதும் ட்ரொட்ஸ்கிசத்தை வரலாற்று ரீதியாகக் காட்டிக் கொடுத்ததாக அமைந்ததோடு, அது சந்தர்ப்பவாதத்திற்கெதிரான அனைத்துலகக் குழுவின் போராட்டத்தைப் பாரதூரமாகக் கீழறுத்தது.



மைக்கல் பப்லோ

38. கஸ்ட்ரோவினுடைய குட்டி முதலாளித்துவ ஜூலை 26 இயக்கத்தை சோசலிசத் தொழிலாளர் கட்சி அரவணைத்து, அதை ட்ரொட்ஸ்கிசத்தின் நியாய பூர்வமான ஒரு பிரதியீடு என்று பிரகடனப்படுத்தியதோடு, கியூபாவில் ஒரு தொழிலாளர்களின் அரசு அமைக்கப்பட்டாயிற்று என்று அறிவித்தது, இது நேரடியாக பப்லோவாதிகளுடன் மறு இணைப்புச் செய்து ஐக்கிய செயலாளர் குழுமத்தை அமைக்க இட்டுச் சென்றது. கேஸ்ட்ரோவை சோசலிசத் தொழிலாளர் கட்சி போற்றி புகழ்வதற்கு மையமாக அமைந்தது என்னவென்றால், பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சிகளை முழுமையாக்குவதற்கு சோசலிசப் புரட்சியும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் தேவையில்லை என்று கோரியதாகும். இந்த நிலைப்பாட்டின் மறுபக்கத்தின் அடிப்படையானது என்னவென்றால், பின்தங்கிய நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தை எல்லா தேசிய முதலாளித்துவப் பகுதிகளில் இருந்தும் நிலைநாட்டி, நான்காம் அகிலத்தின் பகுதிகளை அமைத்து, ஜனநாயகப் புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின் மேலாதிக்கத்திற்காகப் போராடுவதற்கு தேவையில்லை என்பதாய் இருந்தது. மறு இணைப்பை நிராகரித்து அனைத்துலகக் குழுவின் பதாகையைத் தற்காத்து நின்ற பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு ட்ரொட்ஸ்கிஸ்டுகளால் இத்தக் காட்டிக் கொடுப்பு எதிர்க்கப்பட்டது. என்றாலும் அனைத்துலகக் குழு நான்காம் அகிலமாக இருந்ததின் ஒரு சிறிய சிறுபான்மையையே கொண்டிருந்தது. பப்லோவினதும் மண்டெலினதும் தலைமையைப் பின் தொடர்ந்த உலகம் முழுவதும் உள்ள இயக்கங்களில் சந்தர்ப்பவாதத்துக்கு ஏற்பட்ட வெற்றி, சர்வதேசத் தொழிலாள வர்க்கத்துக்கு அழிவுகரமான விளைபயன்களை ஏற்படுத்தியது.

39, இது மறு இணைப்புச் செய்யப்பட்டு ஒரு வருடத்திற்குள் எடுத்துக் காட்டப்பட்டது. 1964 ஜூனில் பப்லோவாத சர்வதேசத்தின் இலங்கைப் பிரிவான லங்கா சமசமாஜ கட்சி (LSSP), நாட்டின் முன்னணி முதலாளித்துவ கட்சியான பண்டாரநாயகா அம்மையாரின் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) ஒரு கூட்டரசாங்கத்தில் நுழைந்தது. 1953-ல் அனைத்துலகக் குழு அமைக்கப்படுவதை லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) எதிர்த்ததுடன், அதைத்

( 4ம் பக்கம் பார்க்க )

# நான்காம் அகிலத்தின் முன்நோக்குகள்

— 3ம் பக்கத் தொ

தொடர்ந்து பப்லோவாதிகளுடன் SWP-ன் மறு இணைப்புக்கான தயாரிப்பில் மையப் பங்கு வகித்தது. நான்காம் அகிலத்தின் சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் LSSP, இலங்கையில் அதன்வேலையில் அனைத்து அடிப்படை ட்ராட்ஸ்கிச கோட்பாடுகளையும், நிரந்தரப் புரட்சி தத்துவத்தின் முக்கியமான போக்குகளையும் வரிசைக்கிரமமாக நிராகரித்தது. இந்த காட்டிக் கொடுப்புக்கள் பப்லோவாதிகளால் மூடி மறைக்கப்பட்டன. ஜூன் 1963-ல் மறு இணைப்புக்கான மாநாட்டில் சேர்த்துக்கொண்ட தீர்மானம் பிரகடனப் படுத்தியதாவது: ''எமது இலங்கைப் பிரிவு 1960-ல் SLFPன் மிதவாத முதலாளித்துவ அரசாங்கத்துக்கு ஆதரவளித்த அதன் தவறான அணுகுமுறையை முற்போக்கான முறையில் திருத்திக்கொண்டது. மக்கள் செயலுக்குச் செல்லத் தொடங்கியதிலிருந்து, அது அதன் நேற்றைய தேர்தல் கூட்டாளிகளுக்கு எதிராக மக்களின் தலைமையின் முன்னணியில் அதனை நிறுத்திக் கொள்ளத் தயங்கவில்லை.'' சரியாக ஒரு வருடத்தின் பின் LSSP, SLFPன் தலைமையிலான கூட்டரசாங்கத்துடன் இணைந்தது. இந்தக் காட்டிக்கொடுப்பு ஆசியா முழுவதும் சோகமான பிரதி விளைவுகளைக் கொண்டிருந்தது. அது உடனடியாக ஸ்டாலினிஸ்டு மற்றும் மாவோயிச கட்சிகளின் கைகளைப் பலப்படுத்தியது. இந்த கட்சிகளின் அரசியல் செல்வாக்கு LSSP நிரந்தரப்புரட்சி வேலைத் திட்டத்தை முன்னெடுத்து இலங்கையில் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசப் போராடி இருக்குமாயின் சுக்குநூறாக்கப்பட்டிருக்கும். இந்த அர்த்தத்தில் LSSPன் காட்டிக் கொடுப்பு, 1965ல் மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கொள்கைகளினால் முழுமையாக நிராயுதபாணியாக்கப்பட்டிருந்த இந்தோனேசிய தொழிலாள வர்க்கத்தின் அழிவுகரமான தோல்விக்கு நேரடியாகப் பங்களித்தது.

40. பப்லோவாத சந்தர்ப்பவாதம் ஆயிரக்கணக்கான ட்ரொட்கிச ஊழியர்களை வரிசைக்கிரமமாக தவறான வழியில் இட்டுச் சென்று, இறுதியாக நான்காம் அகிலத்தின் ஒரு பெரும் பகுதியை அழித்தது. ஸ்டாலினிஸ்டுகளின், சமூக ஜனநாயகவாதிகளின் வெளிப்படையான துரோகத்திற்கு ஒரு வெற்றிகரமான சவாலாக தொழிலாள வர்க்கம் வருவதிலிருந்து திசை திருப்புவதில் முக்கியமான அரசியல் பங்கை பப்லோவாதிகள் வகித்தனர். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பாட்டாளி வர்க்கம் ஒரு புரட்சிகர சக்தி இல்லையென்று பப்லோவாதிகள் முழுமையாக நிராகரித்து, மாணவர்களை ஒரு புதிய புரட்சிகர முன்னணி எனப்போற்றினர். (மண்டெலின் ''சிவப்பு பல்கலைக் கழகங்கள்'' தத்துவம்) அத்துடன் பரந்த தொழிலாள வர்க்க இயக்கங்களின் ஸ்டாலினிச, சமூக ஜனநாயகவாத தலைமைக்கு எந்த ஒரு அரசியல் சவால் ஏற்படுவதையும் எதிர்த்தனர்.

41. லத்தீன் அமெரிக்காவில் பப்லோவாத மத்தியவாதத்தின் சந்தர்ப்பவாதத்தின் எதிர்ப்புரட்சிகரத் தன்மை தீர்க்கமாக நிலை நாட்டப்பட்டது. உள்ளூர் ஸ்டாலினிச சமூக ஜனநாயகக் கட்சிகளின் விதிவிலக்கான பலவீன சூழ்நிலைமை ட்ரொட்ஸ்கிச இயக்கத்துக்கு தொழிலாள வர்க்கத் தலைமையை வென்றெடுப்பதற்கான ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் காஸ்ட்ரோயிசத்தை பெரோனிசத்தை மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்தின் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தின் ஏனைய வடிவங்களையும் பப்லோவாதிகள் போற்றிப் புகழ்ந்தது. 1970களில் பயங்கரமான தோல்விகளுக்கு கிரிமினல் பங்களிப்புகளாக இருந்தது. ஆகஸ்டு 1971ல் இராணுவத்தின் கைகளில் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் தோல்வி, நேரடியாக இடைநிலைவாத PORயினால் பின்பற்றப்பட்ட கொள்கைகளின் காரணத்தினாலாகும். சிலியில் பப்லோவாதிகளின் கலைப்புவாதக் கொள்கைகள் அலண்டேயின், ஸ்டாலினிசத்தின் காட்டிக்கொடுப்புகளுக்கு வசதியளித்தது அலண்டே தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் மூன்று வருடங்களுக்கும் சற்றுக் குறைவாக, சிலி தொழிலாள வர்க்கம் ஒரு உண்மையான புரட்சிகர நிலைமையை எதிர்கொண்ட பொழுது, பப்லோவாதத்தலைவர் லூயிஸ் விட்டல் ஏற்கனவே தனது கட்சியை குட்டி முதலாளித்துவ MIR-னுள் கலைத்தபின் பின்வருமாறு எழுதினார்: ''கேள்விக்கிடமற்ற உண்மை என்னவென்றால், இரண்டாம் உலகப்போரின் பின்னைய காலகட்ட புரட்சிகள் நாளின் நடப்பாக இயங்குகின்ற கெரில்லாப் போர்த் தந்திரத்தை முன் வைத்தன. அதன் கேந்திர மையம் நாட்டுப்புறத்திலாகும்.'' இந்த சொற்கள் 1950களில் பப்லோவாத முன்னோக்குகளின் குணும்சங்களாக இருந்தது. ட்ரொட்ஸ்கிசத்தின் முழுவேலைத்திட்ட மரபையும் கைவிடுவதற்கு தத்துவார்த்த நியாயப்படுத்தலை வழங்கியது. ஆர்ஜெண்டினாவில் 1963-மறு இணைப்பினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் தவறான வழிகாட்டல், எந்த அளவும் குறைவில்லாத பயங்கரமான பிரதி விளைவுகளைக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எர்னஸ்டோ சேகுவாராவை ட்ரொட்ஸ்கிசத்துக்கு சம இணையான அரசியல் தத்துவவாதியென துதிபாடிய மண்டேலின் வழிகாட்டலின் கீழ் பப்லோவாத இயக்கத்தின் ஒரு பிரிவினர் நகர்ப்புற கெரில்லா போர்த்தந்திரங்களின் பக்கம் திரும்பினர், மற்றும் சரீரரீதியாக அழித்தொழிக்கப்பட்டனர். மரினோவாலும் ஹன்சனினாலும் தலைமை தாங்கப்பட்ட மற்றைய பிரிவு இழிவான முறையில் பெரனிடமும் முதலாளித்துவ அரசிடமும் சரணாகதி அடைந்தது. அனைத்து பப்லோவாதப் பிரிவுகளின் காட்டிக் கொடுப்புக்களின் இணைந்த உற்பத்தியே 1976ல் ஜெனரல் விடெலாவின் வெற்றியாகும்.

42. 1968-75 இடையிலான முக்கிய வருடங்களில் உலக நிலைமை பிரம்மாண்டமான சர்வதேச தொழிலாள வர்க்க எழுச்சியினாலும் பொருளாதாரக் கொந்தளிப்பினாலும் ஆட்டம் கண்டிருந்தபோது, ஏகாதிபத்தியம் உயிர் பிழைப்பதை சாத்தியமாக்கிய ஒரு முக்கியமான துணைப்பங்கை, பப்லோவாத மத்தியவாதிகளின் சந்தர்ப்பவாதம — அது ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம் மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்துக்கு வழங்கிய அதன் உதவியின் மூலம் வகித்தது. மத்தியவாதம் ஏகாதிபத்தியத்தின் இரண்டாம்தர ஏஜென்சி எனும் ட்ரொட்ஸ்கியின் மதிப்பீட்டை ஊர்ஜிதம் செய்தது. இயற்கையாகவே குட்டி முதலாளித்துவ தோல்விவாதிகள், பாட்டாளி வர்க்கத்தின் கையாலாகாத தன்மை பற்றி அதிமேதாவித்தனமாக பேசிய அதே சமயம் முதலாளித்துவ வர்க்கத்திற்கு புதிய வளமான சந்தர்ப்பங்களைக் கண்டார்கள். மரணித்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவம் 1980ஆம் ஆண்டுகள் வரையிலும் கூட உயர்வாழ முடிந்தது என்பது சம்பந்தமாக அவர்கள ஸ்தூலமாக ஆராய அக்கறை கொள்ளவில்லை, பப்லோவாதிகளைப்பொறுத்த அளவில் அவர்களுடைய சொந்தக் கொள்கைகளின் புறநிலையான முக்கியத்துவம் பற்றியோ வரலாற்று விளை பயன்கள் பற்றியோ, ஆராய அவர்கள் சிறிதும் கரிசனை கொள்ளவில்லை. மத்தியவாதிகளின், தீவிர வாதிகளின், வர்க்கநிலை இழந்த அறிவு ஜீவிகளின் அனைத்துக் குட்டி முதலாளித்துவ சகோதரத்தன்மை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரத் திறன்களை முன்கூட்டியே உதறித்தள்ளுபடி செய்து, அதன் தோல்வி தவிர்க்க முடியாததென ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள், 1964ல் இலங்கையிலும், 1968ல் பிரான்சிலும், 1973ல் சில்லியிலும், 1974ல் கிரீஸ் மற்றும் போர்த்துக்கலிலும் ஒரு சரியான மார்க்சிசக் கொள்கையின் விளைபயன்கள் என்னவாக இருந்திருக்கும் என்பதைப் பற்றிக்கூட ஒரு பொழுதுமே சிந்திக்கவில்லை.



ஜோசப் ஹான்சன்

43. மறுபுறம் அனைத்துலகக் குழுவானது இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய காலப்பகுதியில், பாட்டாளி வர்க்கத்தின் மூலோபாய ரீதியான அனுபவங்களில் இருந்து தீர்க்கமான படிப்பினைகளை அகழ்ந்தெடுத்து, வரவிருக்கும் புரட்சிகர வெடித்தெழுதல்களுக்கான தயாரிப்புகளுக்கு அதனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது: உலக சோசலிசப் புரட்சியின் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டி சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்த, சந்தர்ப்பவாதத்திற்கும் மத்திவாதத்திற்கும் எதிராக சமரசமற்ற சளையாத போராட்டம் தேவையானது.

## சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டத்தின் ஒரு வரலாற்று ஐந்தொகை

44. 1953-ஆம் ஆண்டில் நான்காம் அகிலத்தினுள் சந்தர்ப்பவாதத்தின வளர்ச்சியை எதிர்த்துப் போராட அனைத்துலகக் குழு அமைக்கப்பட்ட பொழுது, ''வைதீக ட்ரொட்ஸ்கிசத்தின்'' (Orthodox Trotskyism) வேலைத்திட்டத்திற்கு எதிரான திருத்தல்வாதத் தாக்குதல்களை எதிர்த்து சர்வதேச வேலைத்திட்டம் ஒன்றைத் தொடுக்கும்படி கனனுடைய உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்திற்கோர் பகிரங்கக் கடிதம் அறைகூவல் விடுத்தது. அது மார்க்சியத்துற்கும் பப்லோவ தத்திற்கும் இடையிலான பிளவு சமரசத்திற்கு சாத்தியமில்லாத அளவு ஆழமனது என்று வலியுறுத்தியது. பப்லோவாதிகளின் சந்தர்ப்பவாதத் தத்துவங்களும் அரசியலும் நான்காம் அகிலத்தினுள் வெற்றி ஈட்டுமாயின், சர்வதேச தொழிலாளர் இயக்கத்தினுள் ட்ரொட்ஸ்கிசம் ஒரு இயக்க பூர்வமான புரட்சிகரசக்தியாக இருப்பது கலைத்து அழிக்கப்படும்'' என்று கனன் எச்சரிக்கை செய்தார்.

45. ஆனால் சில வருடங்களினுள் சோசலிசத் தொழிலாளர் கட்சியின் தலைமை பப்லோவாதத்திற்கெதிரான போராட்டத்தைக் கைவிட்டு, 1953ஆம் ஆண்டில் பிளவிற்கு வழிகோலிய வேலைத்திட்டப் பிரச்சனை சம்பந்தமாக எந்த வித கலந்துரையாடலும் இன்றி, பப்லோவாத சர்வதேச செயலாளர் குழுமத

# அனைத்துலகக் குழுவின்
# ன் தீர்மானம்!

டர்ச்சி —

இல்வியா
பிராங்கினின் —>



துடன் மீண்டும் இணைவது பற்றி வலியுறுத்த ஆரம்பித்தது. இந்த கோட்பாடற்ற ரீதியில் மீண்டும் இணைவதற்கான யோசனை கோட்பாடற்றது. ஏனென்றால், அது திட்டவட்டமாக 1953ல் கிளப்பப்பட்ட பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்கள் தலை தூக்காது நசுக்குவதை அடிப்படையாகக் கொண்டிருந்ததனல்—அனைத்துலகக் குழுவின் பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் பகுதிகளினலும் சோசலிசத் தொழிலாளர் கட்சியினுள் உள்ள ஒரு சிறுபான்மையினராலும் எதிர்க்கப்பட்டது. இந்த எதிர்ப்புக்கு எதிராக ஜுன் 1968ல் மீண்டும் மறு இணைப்பு செய்யப்பட்டது.

46. அனைத்துலகக் குழு அமைத்து 35 வருடங்களுக்குப் பின் றும் சோசலிசத் தொழிலாளர் கட்சி பப்லோவாத மறு இணைப்பின் கால் நூற்றுண்டுக்குப் பிற்பாடும் நான்காம் அகிலத்தின் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் அடிப்படை ரீதியான வேலைத்திட்ட விளைபயன்களைப்பற்றி ஒரு முழுமையான ஐந்தொகை ஒன்றை வகுக்கக் கூடியதாக இருக்கின்றது. உண்மையில் சந்தர்ப்பவாதத்தின் தன்மைக்கேற்ப, பப்லோவாதம் ட்ரொட்ஸ்கிசத்துடனன அதன் வேறுபாடுகளை ஒரு வரிசைக் கிரமமாக எடுத்துக் கூற ஒரு பொழுதும் முற்படவில்லை. ஆனல் அதன் திருத்தல்களின் ஒட்டுமொத்தம் குறிப்பாக ட்ரொட்ஸ்கிசத்தினதும் பொதுவாக மார்க்சிசத்தினதும் அடிப்படைக் கோட்பாடுகள் அத்தனையையும் முற்றுமுழுதாக நிராகரிப்பதை பிரதிநிதித்துவம் செய்கின்றது. பப்லோவாதிகள் நான்காம் அகிலம் அமைக்கப்பட்டதன் அரசியல் அத்திவாரங்கள் அனைத்தையும் நிராகரித்துள்ளார்கள். அதாவது அவர்கள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வரலாற்று ரீதியானதுமான செயற்பாடுபற்றி ட்ரொட்ஸ்கியின் ஆய்வையும் அவரது நிரந்தரப் புரட்சி தத்துவத்தையும் நிராகரித்துள்ளார்கள். இன்று பப்லோவாத தத்துவங்களை தீர்க்கமான வரலாற்று அனுபவங்களின் வெளிச்சத்தில் கணிப்பிடுவது சாத்தியமாக இருககிறது.

## ஸ்டாலினிசத்தின் பங்கு பற்றி பப்லோவாதம்

47. பப்லோவாதிகளின் சந்தர்ப்பவாதத் தத்துவங்கள், சோவியத் அதிகாரத்துவத்துக்கு ஒரு புரட்சிகரப் பங்கு இருக்கின்றதென நியாயப்படுத்தும் முயற்சியில் அவற்றின் முதலாவது வெளிப்பாடுகளைக் காட்டின. பப்லோவினலும் எர்னஸ்ட் மண்டேலினலும் வகுக்கப்பட்ட சாசனத்தில், முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் போராட்டம், வரலாற்று வளர்ச்சிப்போக்குக்கு இனிமேல் உந்து சக்தி அல்ல என்பதாகும். பதிலாக அது மார்க்சியத்தினல் விஞ்ஞான ரீதியாக வரையறுக்கப்பட்ட வர்க்கப் போராட்டம் பப்லோவின் கருத்தின்படி ''முதலாளித்துவ ஆட்சி மற்றும் ஸ்டாலினிச உலகம்'' எனப்படும் இரண்டு சக்திவாய்ந்த முகாம்களுக்கு இடையிலான மோதலினல் கடந்து சென்றுவிட்டது: இந்த புதிய ''புறநிலையான சமூக எதார்த்தத்தினுள்'' நான்காம் அகிலத்தின் பதாகையின் கீழ் ஏகாதிபத்திய மற்றும் ஸ்டாலினிச ஆட்சிகள் இரண்டிற்கும் எதிராகத் தொழிலாள வர்க்கத்தை புரட்சிகரமாக அணி திரட்டுவதற்கு இடமே இல்லை. இரண்டு முகாம்களுக்கு இடையிலான பூகோளப்போர் தவிர்க்க முடியாததெனவும், அந்த 'அப்படியான போர்'' அதன் ஆரம்பத்திலிருந்தே ஒரு சர்வதேச உள்நாட்டுப் போரின் தன்மையைக் கொண்டிருக்கும் என்ற முடிவுக்கு பப்லோ வந்ததிலிருந்து ட்ரொட்ஸ்கிச இயக்கத்துக்கு, இருந்துவரும் ஸ்டாலினிச கட்சிகளினுள் செல்வாக்கு செலுத்தி அவற்றை இடது பக்கம் செல்ல வைக்கும் முயற்சியைத் தவிர வேறு எதுவும் அங்கே செய்வதற்கு இருக்கவில்லை. ஸ்டாலினிசக் கட்சிகளினுள் இயங்கிவரும் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் இரண்டாம்தர உதவியுடன் புறநிலை நிபந்தனைகளின் முழுமையான சக்தி இப்படியான கட்சிகளை இடதுபக்கம் தள்ளி, ஏகாதிபத்திய ஆட்சிகளைத் தூக்கிவீச அவர்களை நிர்ப்பந்திக்கும் என்றும், இவ்வாருக நூற்றுண்டுக்கு நிலைத்திருக்கும் ''ஊனமுற்ற தொழிலாளர் அரசுகள்'' ஸ்தாபிக்கப்படும் என்று பப்லோவாதிகள் கூறினர்கள்.

48. வரலாறு ஈவிரக்கமற்ற முறையில் இந்தப் போலியான முன்னேக்கின் மேலெழுந்த வாரியான தன்மையை அம்பலப்படுத்தியது. பப்லோ அவரது கருத்தசன ''புறநிலையான சமூக எதார்த்தத்திற்கு'' இரட்டை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தார்—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க நிலை ஒரு புறமும் சோவியத் அதிகாரத்துவத்தின் ஆதிக்கநிலை மற்றொரு புறமுமாகும்—இவை மோசமடைந்து செல்லும் அமெரிக்க வெளிநாட்டு சென்மதிநிலுவையினலும் (Balance of Payments) சோவியத் அதிகாரத்துவத்துக்கு எதிராக கிழக்கு ஐரோப்பாவில் வெடித்தெழுந்த எழுச்சிகளினலும் விரைவாகவே முரண்பாடடைய ஆரம்பித்தன.

49. இது வெறுமனே ''போர்—புரட்சி'' தத்துவத்தின் பிரமாண்டமான டம்பங்கள் பற்றியதல்ல. ஆனல் மிக முக்கியமாக அதிகாரத்துவ சுயசீர்திருத்தம், ஸ்டாலினிசத்துக்கு இருக்குல் புரட்சிப் பங்குபற்றி கோடிட்டுக் காட்டப்படும் கருத்துரு வரலாற்றினல் மதிப்பிழந்ததைக் காட்டுகிறது. ஸ்டாலினிசத்தின் இயல்பான பரிணமம் இடது பக்கமாக இருக்கவில்லை, அதாவது உலக ஏகாதிபத்தியத்தக்கு எதிரான புரட்சிகரப் போராட்டமாக இருக்கவில்லை; அதற்கு நேர்மாருக அது தொடர்ச்சியாக வலது பக்கம் நோக்கியே இருந்தது: அதாவது தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக உலக ஏகாதிபத்தியத்துடன் மேலும் அதிகரித்துச் செல்லும் நேரடிக் கூட்டை நோக்கியதாய் இருக்கிறது.

50. இருந்தபோதிலும் ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் ஸ்டாலினிசத்துக்கு எதிரான நான்காம் அகிலத்தின் உக்கிரப்படுத்தப்பட்ட சுதந்திரமான புரட்சிகரப் போராட்டத்தின் அவசியம் முன் வைக்கப்பட்டபொழுது, அதிகாரத்துவத்தின் ஆற்றெருணு யுக்திகளை, சுயசீர்திருத்த நிகழ்ச்சிப்போக்கின் புதிய மற்றும் இன்றியமையாத சம்பவம் என்ற பிரமையை பப்லோவாதிகள் வளர்த்து வந்துள்ளார்கள். மீண்டும் மீண்டும் பப்லோவாதிகள் அதிகாரத்துவத்தில் மார்க்சிசத்தின் ஒரு மரண எதிர்ப்பை அல்ல, ஆனல் பலவிதமான ட்ரொட்ஸ்கிசப்பிரிவுகளை வளர்ச்சி செய்வதற்கான அரசியல் விளைநிலத்தையே கண்டனர். இவ்வாறு 1962 மார்ச்சில் பல்வேறு ஆளும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களினுள்ளும் அதன் கூட்டாளிகளினுள்ளும் தோன்றுகின்ற தகராறுகளை ஆராய்ந்த ஏர்னஸ்ட் மண்டெல், பின்வரும் வியக்கத்தக்க ஆய்வைச் செய்தார்!

51: ''சர்வதேச கம்யூனிச இயக்கத்துள் இன்று நடக்கும் விவாதம் ஒரு புரட்சிகர மார்க்சிசத்தை ஒரு உடைந்த முறையில், அதாவது சூரிய கதிர்களை எப்படி படிகம் அது கொண்டுள்ள வண்ணங்களின் நிறமாலையாகப் பிரிக்கின்றதோ அப்படி பிரதிபலிக்கின்றதென்று கூற முடியும். விவாதத்தில் பங்கு கொள்வோரில் ட்ரொட்ஸ்கிச நிலைப்பாடுகள் அத்தனையையும், காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனல் இன்றைய இந்தப் போக்குகள் எதுவும அவற்றை முழுமையாய் ரஷ்யாகள் ஏற்கவில்லை, ஸ்டாலினிச மரபைக் கலக்கின்றார்கள் சீனர்கள் நிரந்தரப் புரட்சி தத்துவத்திற்கு கிட்டுமானமாக வருகிருர்கள்; கியூபர்கள் தைரியமாக ஒரு தொழிலாளர் அரசு மற்றைய நாடுகளின் பாட்டாளிகளுக்கு, புரட்சியை சர்வதேச ரீதியாக விஸ்தரிக்க அறைகூவல் விட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்: யுகோஸ்லாவியர்கள் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாள சபைகளின் கைகளில் இருக்கவேண்டும் என்று விளக்குகிருர்கள்; இத்தாலியர்கள் (அவர்களிலும் பார்க்க குறைவாக போலந்தியர்கள்) கட்சிக்குள்ளும் தொழிற் சங்கத்திற்குள்ளும் லெனினிய மரபான சுதந்திரக் கலந்துரையாடலுக்குத் திரும்புகிருர்கள்; அல்பேனியர்கள் பெரிய அளவினதாயினும் சிறிய அளவினதாயினும் எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் சம உரிமைஎன்னும் கோட்பாட்டையும் எல்லா சர்ச்சைகளையும் மனம்திறந்த நேர்மையான சர்வதேச கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துவைக்க வேண்டிய தேவையைப் பிரகடனப்படுத்துகின்றனர். புரட்சிகர மார்க்சிசத்தின் ஒரு அடிப்படை ரீதியான நிலைப்பாடு மட்டும் இந்தக் கட்சிகள் ஒன்றினல் கூட ஆதரிக்கப்படவில்லை. இது எமது ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் 'ஏகபோகமாக' இருந்து வருகிறது: அதாவது சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தை வழி நடத்தவும் ஒருமுகப்படுத்தவும் ஜனநாயக மத்தியதத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர சர்வதேசியத்தின் முற்றுமுழுதான தேவையாகும்.'' உண்மையில் அது மட்டுமே!

52. 1963 மறு இணைப்பின் தறுவாயில் எழுதுகையில் மண்டெல், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உள்ளே ஏற்பட்டுவரும் சுய சீர்திருத்தல் போக்குகள் ஒரு புதிய அனைத்துலக புரட்சிகர இயக்கத்திற்கு இட்டுச் செல்லும் எனவும நான்காம் அகிலம் அதில் ஒரு பாகமாக இருக்கும் எனவும் நம்பினர். இன்றைய பிளவுகள், குழப்பங்கள் ஊடாக உலக கம்யூனிச இயக்கம் தவிர்க்க முடியாதபடி தனது சொந்த விதிகளின்படி உயர்மட்டத்திற்கான ஒரு ஐக்கியத்தையும் ஒரு அமைப்பையும் நோக்கியும், எமது சகாப்தத்திற்குப் பொருத்தமான லெனினிச வேலைத்திட்டத்தின் அடிப்படையினைக் கொண்ட ஒரு கம்யூனிஸ்ட் அகிலத்தை நோக்கியும் சென்று கொண்டிருக்கிறது'' என்ருர்.

53. பப்லோ, அவரது பழைய கூட்டாளியை விஞ்ச விடாதவாறு ஸ்டாலினிசத்துடனன பிளவின் மீண்டும திருப்ப முடியாத தன்மையை பகட்டாகக் கூறுகையில், ஸ்டாலினுடைய மரணத்தின் பததாண்டுகளின் பின் குறிப்பாக சோவியத் யூனியனில் ஸ்டாலினிச ஒழிப்புப்போக்கானது மீண்டும் திருப்பமுடியாதது மட்டுமன்றி, சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதன் புரட்சிகர புதுப்பித்தலுக்காகன அடிப்படைகளை ஏற்கவவே ஏறபடுததியுள்ளது என்ற வாருன பரிமாணத்தை எடுத்தருக்கின்றது. மற்றைய தொழிலாளர அரசுகள் என்னவாக இருந்தபோதிலும், புரட்சிகர தலைமையை பின்பற்ற விட்டவாருக. சோவியத் யூனியனுனது சீர்திருத்தம்' கூடிய ஒரு சகாப்தப் பாலதயில செல்லவில்லை. ஆனல் அதற்கு மாருக, அது உலகப புரட்சிக்கு ஆதரவாக, ஒரு ஸ்திரமான, தீர்மானகரமான, தெளிவான பங்கை நோககி செயறபடுகிறது.

( ● அடுத்த இதழில் தொடரும் )

## கொர்பச்சேவும் ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும்

# சோவியத் யூனியனில் நிகழ்வதென்ன?

### நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

**மார்ச் 23, 1986**

— ★ டிசம்பர் மாத இதழ் தொடர்ச்சி —

நான்காம் அகிலம், ஒரு தனிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர் அரசு ஏகாதிபத்தியத்துடன் இராஜதந்திரத்தை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை அங்கீகரிக்கின்றது. லெனினின் ழ் ஏகாதிபத்தியத்துடனான அத்தகைய உடன்படிக்கைகள் திட்டவட்டமாக வரையறை செய்யப்பட்டு தொழிலாள வர்க்கத்துக்கு விளக்கப்பட்டன. எந்த விதத்திலும் தேசிய கம்யூனிஸ்ட் கட்சிகளை சோவியத் இராஜதந்திரத்துக்கு அடிமைப்படுத்தி கையளிக்க வேண்டியதில்லை. லெனின் அத்தகைய ஒரு புரட்சிக க் கொள்கையுடன் முன்நோக்கிச் சென்றதாலேயே இளம் தொழிலாளர் அரசுக்கு மாபெரும் இராஜதந்திர வெற்றிகளை ஈட் க் கொடுத்தார்.

சோவியத் யூனியனைப் பேணுவதற்கான ஒரே மூலோபாயம் லெனின், ட்ரொட்ஷ்கியும் போராடிய உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்திலேயே தங்கியுள்ளது. இன்று அது நான்காம் அகிலத்தினால் மட்டுமே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அதிகாரத்துவம் அத்தகைய ஒரு வேலைத்திட்டத்தின் மரண எதிரியாக உள்ளது. ஏனெனில் அது சோசலிசப் புரட்சியினை விஸ்தரிப்பதானது சோவியத் பாட்டாளி வர்க்கத்தை பலப்படுத்தி, தனக்கு சாவுமணி அடிப்பதை சமிக்ஞை செய்கின்றது என்பதை அங்கீகரிக்கின்றது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, சோவியத் யூனியனை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நிபந்தனையின்றி பேணுகின்றது. அது தொழிலாள வர்க்கம் தனது சொந்த விதி முறைகள் மூலம் கிரேம்ளினின் இராஜதந்திர சூழ்ச்சிகளை சடடை செய்யாது இந்த பாதுகாப்பினை ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தை தூக்கி வீச ஓயாது போராடுவதன் மூலம் அமுல் செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றது. ஆதலால் சோவியத் ரூஷ்யாவை பேணுவது என்பது உலக சோசலிசப் புரட்சிக்கான தயாரிப்புடன் ஒத்துச் செல்கின்றது.

25 அனைத்துலக ரீதியில் தொழிலாள வர்க்கத்தில் உள்ள ஏகாதிபத்தியத்தின் முக்கியஎதிர்ப்புரட்சி ஏஜன்சியான ஸ்டாலினிசம் சகல திரிபுவாதச் சக்திகளாலும் பேணப்படுகின்றது. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தைத் தூக்கி வீசும் ட்ரொட்ஸ்கிச அரசியல் புரட்சிக் வேலைத்திட்டத்தின் மீதான அவர்களின் தாக்குதல் ஏகாதிபத்தியத்தின் ஆழமான தேவைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

ஏர்ணஸ்ட் மண்டேலின் ஆதரவுடன் திரிபுவாதி மைக்கேல் பப்லோ முன்வைத்த ஒரு முன்நோக்கு வர்க்கப் போராட்டத்தை தள்ளி வைத்ததோடு ' புறநிலை சமூக யதார்த்தம் முக்கியமாக முதலாளித்துவ ஆட்சியையும் ஸ்டாலினிச உலகையும் உள்ளடக்கி கொண்டுள்ளதாக'' வாதாடியது.

''உருக்குலைந்த தொழிலாளர் அரசுகளின் நூற்றாண்டுகளை'' முன் அனுமானித்து ஏகாதிபத்தியத்திடமிருந்து தன்னை பாதுகாக்க அதிகாரத்துவம் ஒரு 'யுத்தம்–புரட்சி, கொள்கையை அமுல் செய்ய நெருக்கப்படும் எனவும் பிரகடனம் செய்தனர். பப்லோவும் மண்டேலும் தொழிலாள வர்க்கத்தை அழித்து எழுதியதோடு அதிகாரத்துவத்தை சோசலிசத்தின் ஏஜன்டாக்கினர். பப்லோவின் 'புதிய உலக யதார்த்தத்தின்'படி ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் ஒரே பாத்திரம் தம்மை ஸ்டாலினிசத்துக்கு கீழ்படுத்தி அதனை இடதுபுறம் தள்ள முயற்சிப்பதே.

ஸ்டாலினிசத்தின் நெருக்கடி புதிய புரட்சிகர ஆபத்துக்களை சிருஷ்டித்துவந்த நிலைமைகளின் கீழ் புதிய தத்துவார்த்த அரசியல் பாதுகாப்புக்களுக்கு இந்த முழுத் திரிபுவாதமும் ஏகாதிபத்தியத்தின் தேவைகளினையே தனது புறநிலை மூலமாகக் கொண்டிருந்தது. தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு புதிய புரட்சிகரப் பாதையை திறப்பதற்குப் பதிலாக பப்லோவாதிகள், ஸ்டாலினிசத்தின் டலம் எனப்பட்ட மேலெழுந்தவாரியாக அழுத்தங்களுடனும், அதிகாரத்துவத்தின் உள்ளிருந்து 'புரட்சிகரப்' போக்குகளி தோற்றம் பற்றிய ஊகங்களுடனும் ஆரம்பிதனர்.

திரிபுவாதிகள் இந்தப் போக்கினை இன்றுவரை மாற்றிக் கொள்ளவில்லை, 1979ல் மண்டேல் எழுதியதுபோல்:

> ''தோழர். மைக்கல் பப்லோ ஒரு மாபெரும் தனிப்பட்ட பங்களிப்புச் செய்து, 1951ல் எமது மூன்றாவது உலக காங்கிரசில் நாம் நிறைவேற்றிய பிரேரணைகள் அடிப்படையில் சரியானவையானதோடு நான்காம் அகிலம் புயலுக்குத் தாக்கிப் பிடிக்கவும் உதவின என்பதில் நான் தனிப்பட்ட ரீதியில் நம்பிக்கை கொண்டுள்ளேன்.'' (புரட்சிகர மார்க்சிசம் இன்று — பக்கம் 219).

1953ல் ஸ்டாலினின் மரணத்தின் பின்னர் சோவியத் 'தாராண்மையாக்கம்' தொடங்கியபோது பப்லோவாத திரிபுவாதிகள் அதனை அரசியல் புரட்சியின் சாராம்சத்தைக் கொண்ட சீர்திருத்தத்தின் தொடக்கமாக வரவேற்றனர்.

இந்த முன் நோக்கு 1953 ஜூன் கிழக்கு ஜேர்மன் தொழிலாள வர்க்கத்தின் எழுச்சியில் காணப்பட்டதுபோல் அதிகாரத்துவத்தின் நேரடி நலன்களை வெளிப்படுத்தியது.

இந்தச் சம்பங்களின் அடிப்படையில் அரசியல் புரட்சி முன்நோக்கினை ஊர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக நான்காம் அகிலத்தின் பப்லோவாத அனைத்துலகச் செயலகம் சோவியத், கிழக்கு ஜேர்மன் ஸ்டாலினிச தலைவர்கள் ''இன்னும் நன்கு பெரிதானதும், நிசமானதுமான சலுகைகளை வழங்கும் பாதையில் தொடரவும் இன்றைய நிலையில் இருந்து பரந்த மக்கள் நன்கு சகித்துக் கொள்ளக் கூடிய ஒரு நிலைக்கு ஒரு திடீர் பாணியில்' ஒரு பரிமாற்றம் செய்ய கடமைப்பட்டுள்ளார்கள் எனவும் பிரகடனம் செய்தது.'' (ட்ரொட்ஸ்கிசம் எதிர் திரிபுவாதம் தொகுதி 1 – நியூயார் பப்ளிகேசன்ஸ் பக்கம் 302)

26. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, 1953 நவம்பரில் சோசலிசத் தொழிலாளர் கட்சி (SWP) உலக ட்ரொட்ஸ்கிச இயக்கத்துக்கு வரைந்த 'பகிரங்க கடிதத்துடன்' ஸ்தாபிதம் செய்யப்பட்டது. இது திரிபுவாதப் போக்குக்கு எதிரான போராட்டத்தில் பிறந்தது. இப்போக்கானது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தையும் காலனித்துவ நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்தையும் புரட்சிகர தொழிலாள வர்க்கத்துக்கு பதிலீடாக்குவதன் மூலம் உலகப் புரட்சி ஏஜன்சிக்குள் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தை கரைத்துவிட முயன்றது.

இந்த திரிபுவாதப் போக்கு எடுத்த முக்கிய உருவங்களில் ஒன்று – பப்லோவின் வாதத்தின்படி ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு நெருக்கு வாரங்களின் கீழ் கிரேம்ளினும் கம்யூனிஸ்ட் கட்சிகளில் உள்ள அதன் சீடர்களும் ஒரு புரட்சிகரப் பாத்திரத்தினை வகிக்கும் வண்ணம் தள்ளப்படுவர் என்பதாகும்.

1956ல் ஸ்டாலினிச ஆட்சிக்கு எதிரான ஹங்கேரிய எழுச்சியினதும், போலந்து தொழிலாளர் இயக்கத்தினதும் தறுவாயில் மண்டேல், சோவியத் அதிகாரத்துவம் வெகு ஜனங்களின் நெருக்குவாரத்தின் கீழ் பின் தள்ளிவிடமுடியாத 'புதிய பாதை''யில் தொடர்வதாக பிரகடனம் செய்தார்.

அதே ஆண்டில் குருஷ்சேவின் 'இரகசியப் பேச்சுகளை' பிரதிபலிக்கும் விதத்தில் மண்டேல் பிரகடனம் செய்ததாவது: அதிகாரத்துவத்தினை தொழிலாள வர்க்கம் உடனடியாகத் தாக்கவேண்டிய ஒரு 'பிற்போக்கு கூட்டமாக' கணிக்க முடியாது என்பது தெளிவாகி உள்ளது. இந்த பொறிமுறையான, மார்க்சிச விரோத நிலைப்பாடு ட்ரொட்ஸ்கி போதித்த அனைத்துக்கும் முரணானது. பரந்த மக்களின் நெருக்குவாரம் எவ்வளவுக்கு அதிகரிக்கின்றதோ (இதற்கு சமாந்தரமாக பெரிதும் வசதி வாய்ப்புக்கள் கொண்ட தட்டினரும்) அவ்வளவுக்கு அதன் தலைவர்கள் உள்ளடங்கலான அதிகாரத்துவம் முரண்பட்ட போக்குக்களாக பிளவுண்டு போகும், இந்தத் தொடரில் லெனினிசப் பாரம்பரியங்களுடன் தம்மை நேர்மையுடன் மறு அணிதிரட்டிக் கொள்ளும் போக்காக 'நீஸ் போக்கு' தோன்றும்.'' (''சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரஸ்: ஸ்டாலினிச நெருக்கடியின் இறுதிக் கட்டத்தின் தொடக்கம்'' – நான்காம் அகிலத்தை மீள ஐக்கியப்படுத்தும் போராட்டம் – சோ.தொ. கட்சி பிரசுரம்),

(★ 7ம் பக்கம் பார்க்க)

# யூ.என்.பி. வர்க்க யுத்த...

2ம் பக்கத் தொடர்ச்சி

2000 கோடி ரூபாய்களாகும். இந் நிலைமைகள் பணவீக்கத்தில் பெரும் பாய்ச்சலையும் விவசாய, கைத்தொழில் உற்பத்திகளில் வீழ்ச்சியையும், நட்டத்தையும் உண்டுபண்ணும். இலங்கை முதலாளிகளின் கைத்தொழில் மட்டுமன்று 'சுதந்திர வர்த்தக வலய தொழிற்சாலைகளும் இந்நெருக்கடியால் முன்னெரு போதும் இல்லாத விதத்தில் பலிகொள்ளப்படும்.

கடந்த 11 ஆண்டுகளுள் ஏகாதிபத்தியவாதிகளின் காலை நக்குவதன் மூலம் அரை காலனித்துவ பிடியை பலப்படுத்த யூ.என்.பி. அரசாங்கம் செயற்பட்டது. இதன் பொருட்டு கட்டிடத்தொழில், வர்த்தக, சேவை துறைகளிலும் விவசாய திட்டங்களிலும் ஏற்பட்ட வளர்ச்சியின் நன்மைகளை ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கையின் முதலாளித்துவ கையாட்களும், உயர் மத்தியதர வர்க்கத்தினரும் உறிஞ்சிக் கொண்டனர். ஆனால் சனத்தொகையில் 75 இலட்சத்தினர் உணவு முத்திரையினால் பராமரிக்கப்படும் வறியோர் ஆகினர். 1988ல் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளின் கமிட்டி வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி 'வறுமை, வேலையின்மை, போஷாக்கின்மை ஆதியன வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது. 5 வயதுக் கீழ்ப்பட்ட குழந்தைகளில் 37% படுமோசமான போஷாக்கின்மைக்கு ஆட்பட்டுள்ளனர். 1977ல் 228 இருந்து 1989ல் 786ஆக உயர்ந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி செலவினங்கள் தொழிலாளர்களினதும் ஏனைய ஏழைகளதும் வாழ்க்கைத் தரத்தினை அழித்துள்ளது.

6. இந்தச் சமூக நெருக்கடி தொழிலாள வர்க்கத்தினதும் ஏழைகளதும் பிரமாண்டமான போராட்டங்களை தூண்டி, தம்மை நெருப்பு மலையினுள் தள்ளியிருப்பதை முதலாளி வர்க்கம் நன்கு அறியும். தொழிலாள வர்க்கத்தின் போராட்டம் தோன்றுவது பற்றி முதலாளி வர்க்கத்துக்கு நிலவும் மரண பீதியை யூ.என்.பி. — சி.ல.சு.க. முதலாளிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் பொருளாதார அடிப்படையற்ற வாக்குறுதிகளால் நிரம்பியிருந்தமை காட்டுகின்றது.

வரலாற்று மோசடியான இந்த வாக்குறுதிகளின் கீழ் செயற்படுத்தப்படவிருப்பது உண்மையில் நிச தாக்குதல்களே. ஆட்சிப்பீடம் ஏறும் அரசாங்கத்தின் வேலைத்திட்டமாக உலக வங்கி அரச ஊழியர்களின் எண்ணிக்கையை 25%ல் குறைக்கும்படியும் 43 அமைச்சுக்களை 17ஆக வெட்டும்படியும், தனியார் மயமாக்கம் பணமதிப்பிறக்கம், வேலைதுரிதப்படுத்தல், சேமநல சேவை ஒழிப்பினை அமுல் செய்யும்படியும் விதித்திருந்தது.

ஆனால் 'வறுமையை ஒழிக்கும்' வேலைத்திட்டம் பற்றி புத்தறிவு பிறந்ததுபோல் ஜனாதிபதி குரல் கொடுக்கக் காரணம் ஏழைகளின் கிளர்ச்சியை பிடிக்குள் கொணரவும் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் உத்தரவுகளை அமுல் செய்வதற்கான நிலைமையை சிருஷ்டிப்பதே.

''ஜனசவிய'' என்ற இந்த திட்டத்தின் கீழ் உணவு முத்திரை பெறும் குடும்பங்களை சில பிரிவுகளாக பிரித்து மாதாந்தம் ரூபா. 2500/- வீதம் ஒரு வருடத்தினுள் சகல குடும்பங்களுக்கும் 'முதலீடு' வழங்குவதாக பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். இரண்டு வருடத்தினுள் பூர்த்தியாகும் இந்த முதலீடு எனப்படுவதில் மாதத்துக்கு ரூ. 1458/-ஐ நுகர்வுச் செலவுக்கும் மிகுதி ரூபா. 1042/-ஐ வங்கியில் இடுவதன் மூலம் இரு ஆண்டுகளுள் ரூபா. 25000/- திரள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரேமதாசவின் ப நாட்டின் 2500 கிராமங்களில் இத் திட்டத்தினை அமுல் செய்ய அரசாங்க ஏஜண்டுகளாக அதிகாரிகள் கமிட்டி ஒன்று நிறுவப்படும். அவர்களின் வேலை ஜனசவியவின் கீழ் நுகர்வையும் முதலீட்டையும் உற்பத்தியையும் தமது பிடிக்குள் வைத்துக்கொண்டு இயக்குவதே. குரு, வைத்திய, ஆசிரிய, கலைஞர், விவசாயி' என்ற நிலமானித்துவ முறையின் அடிப்படையில் கிராம 'தலைமையை' முன்னெடுக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ளது. பொலிஸ், பாடசாலை, கிராமங்களுக்கு இடையே தொடர்பு என்ற பேரில் பொலிஸ் தலையீட்டுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கும் நோக்கிலான சுய தொழில் திட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது. போஷாக்கின்மையை போக்கும் பொருட்டு பௌத்த கோவில்களிலும் 'இலைக் கஞ்சி' வழங்குவதும் இந்த வேலைத்திட்டத்தில் அடங்கும்.

1950ம் ஆண்டுகளில் மேட்டுநிலங்களிலும், சேற்று நிலங்களிலும் 5 ஏக்கர் வீதம் வழங்கி உதவிமானியமும் வழங்கி ஆரம்பித்த விவசாய திட்டம் முதலாளித்துவ பொருளாதார பிடியின் கீழ் பொறிந்து கொட்டி, ஏழை விவசாயிகள் படுமோசமான வறுமைக்கு ஆளாகினர். அத்தகைய திட்டத்துக்கு அணை கட்டவும் முடியாத பிரேமதாசவின் 'ஜனசவிய' கிராமப்புற ஏழைகளின் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கப் போவதில்லை.

## வரி

பின்தங்கிய ஒரு நாட்டில் கிராமப்புற ஏழைகளை நசுக்கும் பாசிச விதிமுறையாகக் கூடிய இந்த வேலைத்திட்டம் ஆரம்பத்திலேயே தொழிலாளர்கள், ஏழைகளை மோத வைத்து, தொழிலாளர்களின் சம்பளப் பக்கட்டுகளுக்கும், தொழில்களுக்கும் வேட்டு வைக்க திட்டமிட்டுள்ளது. 'ஜனசவிய' எனப்படுவதற்கு நிதி திரட்டும் பொருட்டு தொழிலாளர்களதும் மற்றும் அரசாங்க ஊழியர்களதும் சம்பளத்தில் இருந்து 1%—15% வரையிலான வரியை அறவிடவும் அமைச்சு செலவீனங்களை வெட்டவும், அமைச்சுக்களையும் கூட்டுத்தாபனங்களையும் மூடிவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முழு அபிவிருத்திக்கும் 1947-48ல் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இந்தியாவை பிரிவினை செய்து தமது நலன்களை காக்கும் பொருட்டு திணித்த முதலாளித்துவ ஏஜன்டுகளின் ஆட்சிக்கு எதிராக வளர்ச்சி காணும் இந்திய துணைக் கண்ட தொழிலாளர்களதும் விவசாயிகளதும் தாக்குதலுடன் இணைந்த விதத்தில் இலங்கை தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர போராட்டம் வெடிப்பதே காரணம்.

இந்நிலைமையினுள் பிரேமதாசவின் ஆட்சி, தொழிலாள வர்க்கத்திடமிருந்தும் தமிழ் தேசிய இனத்திடமிருந்தும் இப் பிராந்திய ஏகாதிபத்திய நலன்களை காக்கும் பொருட்டு பொலிஸ்–மிலிடேரி சர்வாதிகாரி ஆட்சியை திணிக்கச்செய்யும் ஒரு கொடிய தலையீட்டினை ஆரம்பித் வைக்கிறது.

பொலிஸ் படைக்கு புதிதாக 36000 பேரை திரட்டுவதும் அரச அதிகாரிகளின் பிடியினை இறுக்குவதும், ம.வி.முன்னணி பாசிஸ்டுகளின் தீர்க்கமான ஆதரவினை வெற்றி கொள்ள முடியாமல் போயின், அவர்களின் பயங்கர இயக்கத்தை தொழிலாள வர்க்கத்தினையும் ஏழைகளையும் நசுக்க பயன்படுத்துவதும் அந்த கொடிய தலையீட்டின் ஒரு பாகமாகும்.

இந்தத் திட்டங்களில் பிரேமதாச அரசாங்கம் இந்திய–இலங்கை உடன்படிக்கையையும் தாண்டி சிங்கள முதலாளி வர்க்க ஆட்சியை காக்கும் பொருட்டு தெற்கிலும் திட்டவட்டமான தலையீட்டை உண்டுபண்ணும் விதத்தில் இந்திய ஆட்சியாளர்களுடன் 'நட்பு உடன்படிக்கை'க்குச் செல்லவும் தயாராகவுள்ளது.

பௌத்த சாசன அமைச்சினை நிறுவுவதன் மூலம் மத வேறுபாடுகளை காட்டும் தயாரிப்பையும் வட–கிழ் மாகாணங்களை பிரிக்கும் பிரச்சினையையும் இன, மத பூகம்பத்தினை கிளறுவதையும் தாண்டி ஜனாதிபதி பிரேமதாச தனது ஆயுத குதத்தில் இருந்து ஆயுதம் தூக்கியுள்ளார்.

7. அவசரகாலச் சட்டத்தை நீக்கியமை அரசியல் கைதிகளை விடுதலை செய்தமை மற்றும் பல சலுகைகளைப் பிரேமதாச அரசாங்கத்திடம் இருந்துபெற்றுக்கொண்ட மக்கள் விடுதலை முன்னணி அரசியல் படுகொலைகள் மூலம் தமது ஆளுமையை உறுதிப்படுத்தும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதோடு கடந்த சில வாரங்களுள் 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை வங்கிகளில் கொள்ளையடித்ததன் மூலமும், ஆயுதகொள்ளைகள் மூலமும் தொழிலாள வர்க்க இயக்கத்தையும் ஏழை விவசாயிகளையும் தமிழ் தேசிய இனத்தையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதில் ஈடுபட்டுள்ளது, தமது பாசிச கிளர்ச்சிகளுக்கு தொழிலாளர்களை பலாத்காரமாக அடிமைப்படுத்த முடிவு செய்துள்ள ம.வி.மு. 'மோசடி' ஜனாதிபதி தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் எதிராக பெப்ரவரி 21ம் திகதி ''அடையாள வேலைநிறுத்தம்'' செய்யும்படி அழைப்பு விடுத்தது. இந்த பாசிஸ்டுகளின் இலக்கு யூ. என். பி. அரசாங்கத்தின் வங்குரோத்தினை பயன்படுத்தி, தொழிலாள வர்க்கத்தினை ஸ்தம்பிக்கச் செய்யும் கேவலம் தலைமைகளின் உதவியைப் பெற்று தொழிலாளர் இயக்கத்துக்கு தொடுக்கும் தாக்குதல் மூலம் படிப்படியாக அதன் பலத்தினை அழித்து தமது முறையினை கிட்டச் செய்வதே,

8. ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளி வர்க்கமும் உண்டுபண்ணப்போகும் காட்டுமிராண்டித்தனத்தினை இலங்கை, தமிழ் ஈழ தொழிலாள வர்க்கம் இந்திய துணைக்கண்ட தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து போராட்டத்துக்கு கிளர்ந்து ஏழை விவசாயிகளையும் ஒடுக்கப்படும் மக்களையும் தம்மைச் சூழ அணிதிரட்டி, புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுவதன் மூலமே நிறுத்தமுடியும்.

பாட்டாளி வர்க்கம் நடைமுறைப்படுத்த வேண்டிய சோசலிச, ஜனநாயக வேலைத் திட்டம்:—

★ ஏகாதிபத்திய, முதலாளித்துவ சொத்துக்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசிய மயமாக்கும் சோசலிச வேலைத் திட்டம்.

★ ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் அரச ஏகபோகம் வெளிநாட்டுக் கடன்களையும் வட்டிகளையும் திருப்பிச் செலுத்துவதை பகிஷ்கரித்தல், சர்வதேச நாணய நிதியம் – உலக வங்கி – ஐக்கிய நாடுகள் சபை பொது நிலவாய நாடுகள் என்பவற்றுடன் தொடர்புகளைத் துண்டிப்பதன் மூலம் ஏகாதிபத்திய பிடியை உடைத்தல்.

★ வட–கிழ் மாகாணங்களில் இருந்து இந்திய – இலங்கைப் படைகளை வெளியேற்றுதல், தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை உறுதி செய்தல்,

★ ஏழை விவசாயிகளின் நிலவுரிமையை உறுதி செய்தலும் காணி பிரச்சினையை தீர்ப்பது உள்ளடங்கலான விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்தல்;

ஆனால் இந்த வேலைத்திட்டத்தினை, இந்திய துணைக் கண்ட தொழிலாள வர்க்கத்துடன் அனைத்துலக ஐக்கியத்தினை உறுதி செய்யும் அடிப்படையில் – அனைத்து இந்திய சோசலிசக் குடியரசு மூன்நோக்கின் அடிப்படையில், இலங்கை, தமிழ் ஈழ ஐக்கிய சோசலிச குடியரசுக்காகப் போராடுவதன் மூலமே நடைமுறைப்படுத்த முடியும்; அதாவது இராணுவ–பாசிச சர்வாதிகாரத்துக்கு எதிராக பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்துக்காகப் போராடுவதன் மூலமேயாகும். இப் போராட்டம் உலக சோசலிச புரட்சி மூலோபாயத்தினை அடிப்படையாகக் கொண்டது,

இந்திய அரசாங்கத்தின் இரத்தம் சிந்தும் கூலி ஏஜன்டுகளான தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூடைக்குள் அடங்கி இடப்பவர்களுக்கு எதிராக வாக்களித்தவர்களிடமிருந்து கிடைத்த காலுதையைப் போலவே இந்திய ஆட்சியாளர்களின் காலடிகளை வருடுகின்ற போதிலும் தாம் தமிழர் விடுதலைக் கூட்டணி காட்டிக் கொடுப்பாளர்களில் இருந்து வேறுபட்டவர்கள் எனக் காட்டிக் கொள்ளும் ஈரோஸின் அநேக வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டமையும், சி.ல.சு. கட்சி முதலாளிகள் தேர்தலில் முன்நிற்க முடியாமல் போனமையும் 35%—50% வாக்களிப்பை பகிஷ்கரித்தமை போன்ற விடயங்கள் சிதறடிக்க முடியாமல் போயுள்ள தமிழ் தேசிய இனத்தின் எதிர்ப்பினைக் காட்டியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமை, இந்த எதிர்ப்பினை இந்திய, இலங்கை முதலாளிகளுடன் சமரசம் செய்து கொள்வதற்கான ஒரு ஆயுதமாகப் பார்க்கிறார்கள். அவர்கள் தீர்வுக்காக தம்முடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும்படி ஜனாதிபதி பிரேமதாசவை கேட்டுக் கொண்டுள்ளார்கள்; பாட்டாளி வர்க்கப் புரட்சிகளையும்

8ம் பக்கம் பார்க்க

## சோவியத் யூனியனில்...

6ம் பக்கத் தொடர்ச்சி

ஸ்டாலினிச அதிகாரத்துவத்திடையேயான பிளவுகள் சம்பந்தமான ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் நிலைப்பாடு, தொழிலாள வர்க்கம் தனது சொந்த சுயாதீனமான பலத்தில் நம்பிக்கை கொண்டு, தனது சொந்த அமைப்புக்களை அமைத்து, அதிகாரத்துவத்தினை சோவியத்துக்களில் இருந்து வெளியேற்றுவதோடு, இந்தப் பிளவுகளை அரசியல் புரட்சியை அமுல் செய்யவும் புயன்படுத்த வேண்டும் என்பதேயாகும்.

ஓட்டு மொத்தத்தில் பப்லோவாதம் தொழிலாள வர்க்கத்தை வெகு ஜனங்களின் நெருக்குவாதத்தின் கீழ் தலை நீட்டும் ஒரு புரட்சிசரப் போக்கு எனப்படுவதற்கு கீழ்ப்படுத்த முயல்வதன் மூலம் அதிகாரத்துவத்தின் மேலாதிக்கத்தைப் பேண [illegible]யல்கின்றது.

மிகுதி அடுத்த இதழில்

# யூ.என்.பி வர்க்க யுத்த...

● 7ம் பக்கத் தொடர்ச்சி

தேசிய விடுதலைப் போராட்டங்களையும் நசுக்கும் உபாயத்தினைக் கையாளும் ஒரு மத்திய நிலையமான ஐக்கிய நாடுகள் சபையை தலையிடும்படி இத் தலைமைகள் வேண்டியுள்ளன. தமிழ் தேசிய இனத்தின் சிதறடிக்க முடியாத எதிர்ப்பும் தேசிய இறப்புரிமைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையின் சீர்கேடும் திரும்பத் திரும்ப ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது; “இலங்கை தொழிலாள வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும் அவ்வாறே தமிழ் விடுதலை போராட்டத்துக்குமான தீர்வினை இந்திய துணைக் கண்ட சோசலிச குடியரசின் அடிப்படையில் தமிழ் ஈழம், இலங்கை, இந்திய தொழிலாள வர்க்கத்தின் ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும். இம் முன்நோக்கின் அடிப்படையல் தமிழ் ஈழ, இலங்கை ஐக்கிய சோசலிசக் குடியரசின் பதாகையின் கீழ் போராட முன்வருமாறு தமிழ் ஈழ கதொழிலாளர்களையும், விடுதலைப் போராளிகளையும் ஏழை விவசாயிகளையும் நாம் வேண்டுகின்றோம்.

10: நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கினை வரைகையில் தொழிலாள வர்க்கம் இன்று முகம் கொடுத்துள்ள பிரமாண்டமான அரசியல் நெருக்கடியை தீர்க்கதரிசனமாகக் கண்டு, பின்வருமாறு குறிப்பிட்டது;

“மேலும் வடக்கு-கிழக்கில் இந்தியர்களின் பிரசன்னத்தை அங்கீகரிப்பதன் மூலம் இது (சமசமாஜ கட்சி) ஒடுக்கப்படும் சிங்கள விவசாயிகளின் நியாயமான தேசிய உணர்வுகளை இரக்கமற்ற முறையில் புறக்கணிப்பதோடு படுபிற்போக்கு மக்கள் விடுதலை முன்னணியினதும் அதன் நம்பிக்கைமிக்க சிறீ லங்கா சுதந்திரக் கட்சி ஆலோசகர்களதும் கரங்களைப் பலப்படுத்துகின்றது. இக்கொள்கை குட்டி முதலாளித்துவ வெகு ஜனங்களின் கண்களில் தொழிலாளர் இயக்கத்தை செல்வாக்கு இழக்கச் செய்யவும், சிங்கள இனவெறி அடிப்படையிலான பாசிச இயக்கத்தின் பெருக்கத்துக்கும் உதவுகின்றது. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினை இலங்கை முதலாளி வர்க்கப் போராட்டத்துடனும், அத்தோடு இதே வர்க்கப் போராட்டத்தினை சிங்கள, தமிழ் வெகுஜனங்களை ஜனநாயக ரீதியாக ஐக்கியத்துடன் இணைப்பதற்குப் பதிலாக சமசமாஜக் கட்சி ஒடுக்கப்படும் சனத்தொகையின் சகல பிரிவினரையும் அந்நியமாக்கச் சாத்தியமான அனைத்தையும் செய்து வருகின்றது. இது இந்திய ஆக்கிரமிப்பினை பெருமை பாராட்டுகின்றது, தமிழர்களை ஒழித்துக் கட்டுவதை ஆதரிக்கின்றது. தெற்கில் ஜயவர்தனவின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளை அங்கீகரிக்கின்றது. சமசமாஜக் கட்சியின் கொள்கைகளின் அச்சாணி ஒரு சோசலிச, ஜனநாயக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தினை சுயாதீனமாக அணிதிரட்டுவதை நிராகரிப்பதே”. (இந்திய-இலங்கை ஒப்பந்தமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும், 1987 நவம்பர் பக்கம் 12–13)

சமசமாஜக் கட்சி தலைமையின் இக் காட்டிக் கொடுப்புக்களுடன் கம்யூனிச, நவ சமசமாஜக் கட்சிகள் இணைந்து கொண்டன.

11. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மேற்சொன்ன வேலைத்திட்டம், சுலோகங்களின் அடிப்படையில் போராடிவரும் அதே வேளையில் அரசாங்கம் ஆண்டுவரும் அரச–கூலிப் படைகளின் தாக்குதல்களுக்கும், ம.வி.மு பாசிச தாக்குதல்களுக்கும் எதிராக தொழிலாள வர்க்க அமைப்புக்களையும் வேலைத்தலங்களிலும், வசிப்பிடங்களிலும் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களதும் ஐக்கிய முன்னணியை உருவாக்கும் பரந்த அவசியம் ஏற்பட்டுள்ளது;

சமசமாஜ-கம்யூனிச-நவ சமசமாஜ – இ.தொ.கா – ஜ.தொ.கா: தலைமைகள் இன்று ஈடுபடவேண்டிய முக்கிய அரசியல் பணியாக அதுவுள்ளது: பாட்டாளி வர்க்கம் சுயாதீனமான புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ் தேசிய இனத்தையும் கிராமப்புற ஏழைகளையும் தம்பக்கம் அணிதிரட்டி ஏகாதிபத்தியபிடியையும் யூ.என்.பி. ஆட்சியையும், முதலாளித்துவ அமைப்பையும் தூக்கி வீச அஞ்சாது திரும்புதல் இன்று அவசியம்.

அத்தகைய வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு நடாத்தும் அரசியல் நடைமுறை போராட்டத்தின் மூலம் இராணுவ சர்வாதிகார தயாரிப்புக்களை மட்டுமன்றி பாசிஸ்டுகளை தனிமைப்படுத்தி தோற்கடிக்கவும் முடியும்;

சமசமாஜ-கம்யூனிச-நவ சமசமாஜ – இ.தொ.கா. – ஜ.தொ.கா: தலைவர்கள் முதலாளித்துவ கட்சிகளுடன் கொண்டுள்ள தொடர்புகளை தகர்த்து, மேற் சொன்ன வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்துக்குப் போராடும்படி நெருக்குமாறு சகல தொழிலாளர்களையும் நாம் வேண்டுகின்றோம்.

12 கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள், ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ.ல.சு: கட்சிக்கு முழுமனே இடமளியாதது குறித்து தமது கூட்டு முதலாளித்துவ ஸ்ரீ.ல. மக்கள் கட்சி, நவ சமசமாஜக் கட்சிகளை குறை கூறுவதோடு “யூ.என்.பி. எதிர்ப்பு முன்னணியை” விஸ்தரிக்க ஸ்ரீ.ல.சு: கட்சி முதலாளிகளுடன் கைகோர்க்க தயாராகி வருகின்றுர்கள்.

நவ சமசமாஜ தலைவர் வாசுதேவ நாணயக்கார யூ.என்.பி: எதிர்ப்பு முன்னணியின் பேரில் பாசிச மக்கள் விடுதலை முன்னணியுடன் தன்னும் முன்னணியிமைக்க தயார் என்ற விதத்தில் முற்றிலும் சந்தர்ப்பவாத யோசனைகளை அள்ளி வீசியுள்ளார்: “ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினை ஒழிப்பதும், அதனை பாராளுமன்ற அதிகாரத்தின் மூலம் சுற்றிவளைத்து சிறைப் பிடிப்பதுமே இன்றைய யுகத்தின் முக்கிய அவசியமாகி உள்ளது. ஜனாதிபதி அதிகாரத்தினை சவால் செய்யும் பாராளுமன்ற அதிகாரத்தினை கட்டி எழுப்பும் பொருட்டு எமது கொள்கைகள், வேலைத் திட்டத்தினை காட்டிக்கொடுக்காமல் எந்தவொரு எதிர்க்கட்சி அரசியலுடனும் இணைந்து செயல்பட நாம் தயார். இதன் பேரில் மக்கள் விடுதலை முன்னணியோடு தன்னும் பின்வாங்க மாட்டோம். (ராவய, 1989 பெப்ரவரி)

தொழிலாள வர்க்கத்தினுல் பாசிச தாக்குதலுக்கு எதிராக அரச படைகளுடன் கைகோர்க்க முடியாததோடு, யூ.என்.பி. அரச தாக்குதல்களுக்கு எதிராக பாசிஸ்டுகளுடனும் கைகோர்க்க முடியாது. இவை தொழிலாள வர்க்கத்தை தற்கொலை செய்துகொள்ளும்படி கூறும் ஆலோசனைகளாகும். இ.தொ.கா. தலைவர்கள் யூ.என்.பி.யுடன் இரண்டறக் கலந்து தேர்தலில் பங்கு கொண்டதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டமை தோட்டத் தொழிலாளர்கள் உள்ளடங்கலான முழுத்தொழிலாள வர்க்கத்தையும் முதலாளி வர்க்கத்துக்கு பலியிடும் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டமையை தெளிவுபடுத்தியது.

13. தொழிலாள வர்க்கம் தமது அமைப்புக்களை முதலாளித்துவ கட்சிகளுடனும், அரசுடனும் கட்டிப்போடும் மக்கள் முன்னணி அரசியலை நிராகரிக்க வேண்டும். அது சகல தொழிலாளர் அமைப்புக்களையும் கொண்ட ஐக்கிய முன்னணியை அமைக்கும்படி தலைவர்களை நெருக்கவேண்டும்.

★ தொழிலாளர் பாதுகாப்பு அணிகளை அமைத்தல், ★ அவற்றினை தொடர்பு படுத்தவும் ஏழை விவசாயிகளையும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும் அழைக்கவும் நடவடிக்கை குழு நிறுவுதல், ★ ஊர்வலங்கள் மறியல்களை ஏற்பாடு செய்தல் ★ பொது வேலை நிறுத்தத்தினை ஏற்பாடு செய்தல் என்ற நடைமுறை நடவடிக்கையை அமுல் செய்யும் பொருட்டு ஐக்கிய முன்னணியில் இணையுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களை கேட்டுக் கொண்டுள்ளது: கட்சிகளுக்கிடையேயான வேலைத்திட்ட முரண்பாடுகளுக்கு இடையேயும் தொழிலாளர் இயக்கத்தை பாதுகாக்கும் பொருட்டு அத்தகைய ஐக்கிய முன்னணியை நிறுவ நடவடிக்கை எடுப்பது பெரும் அவசியமாகும். இந்த ஐக்கிய முன்னணிக்கான நடவடிககை எடுக்கும்படி இத் தலைவர்களை வேண்டும்படி இக் கட்சிகளின் அங்கத்தினர்களையும் ஏனைய தொழிலாளர் வர்க்க அமைப்புக்களையும் நாம் வேண்டுகின்றோம். ஏற்கனவே பு.க.க. ஆரம்பித்துள்ள பிரச்சாரத்துடன் இணைந்துகொண்டுள்ள அமைப்புக்களுடன் கைகோர்த்து முன்செல்ல வருக!

உலக வங்கியும், முதலாளித்துவ அரசாங்கமும் நடைமுறைப்படுத்தும் வேலை நீக்கங்கள், வாழ்க்கைத்தர, சம்பள வெட்டுக்கள், வேலை துரிதப்படுத்தல், சேம நல சேவை வெட்டுக்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்தினை அணி திரட்டவும், அபிவிருத்தி செய்யவும் ஓயாது போராடும்படி நாம் தொழிலாளர்களை வேண்டுகின்றோம். இப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு ஐக்கிய முன்னணி புதிய தெம்பினை வழங்கும்,

இந்த அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை புரட்சிக் கட்சியாக கட்டி எழுப்ப இணையுமாறு நாம் சகல தொழிலாளர்களையும் ஏழைகளையும் வேண்டுகின்றோம்.

# ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு...

1ம் பக்கத் தொடர்ச்சி

“இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதங்கள், கட்டுரைகள் மூலம் இலங்கை தொழிலாள வர்க்கம் யூ.என்.பி. அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும்; சிங்கள இனவபத ஜே.வீ.பி, யினதும் கூட்டு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதை கண்டு கொள்ளலாம்.

“தொழிலாளர்களின் உரிமைகளை காக்கும் பொது இலக்கின் பேரில் அணிதிரள்வதற்கு எதிராக கட்சிகளதும் அமைப்புக்களதும் அரசியல் கருத்து வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டதால் 1930பதுகளில் ஜேர்மனியில் தொடங்கி அநேக நாடுகளில் தொழிலாள வர்க்கம் பெற்றுள்ள தீர்க்கமான அநுபவங்களினுல் ஐக்கிய முன்னணியை ஒழுங்கு செய்யம்படி கோரும் தீர்மானத்தினை நிறைவேற்று சபைகளைக் கட்சி, இ.தொ.கா., ஜ.தொ.கா.வுக்கும் அறிவிக்கும்படியும் கோருகின்றேன்” என கோரும் கடிதத்தில் சோசலிச லேபர் லீக்கின் செயலாளர் தோழர். நிக் பீம்ஸ் கையொப்பமிட்டுள்ளார்.

சிட்னி நகரில் பெப்ரவரி முதல் வாரத்தில் கூடிய கைத்தொழில் தொழிலாளர்களின் கூட்டத்தில் சுல்லோரா பிராந்திய புகையிரத வேலை தள தொழிலாளர் தலைமை கமிட்டி இந்த பிரச்சாரத்துக்கு ஆதரவினை வழங்கிற்று. இந்த முக்கிய வேலைத்தளத்தில் சுமார் 2000 தொழிலாளர்கள் அழைக்கப்பட்டனர். அத்தோடு இச் சங்கம் இது சம்பந்தமாக விடயங்களைத் தெளிவுபடுத்தும் பொருட்டு எஸ்.எல்.எல்.பேராளர்களையும் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்துள்ளது. அங்கத்தவர்களான லூவி கென்ட், செனட்டர் ஒலிவ் சஸாரோப் மூன்று பெரும் தேசிய தொழிற் சங்க தலைவர்களான பட் வலஹர் (அவுஸ்திரேலிய குளிரூட்டல் களஞ்சிய ஊழியர் சங்க செயலாளர்) நெயெரின் நெட்லன்ட் (சமூக சேமநல இணைச் சங்கம்) கிரேக் றிச்சட்(பேக்கறி தொழிலாளர்கள், பிஸ்கட் தயாரிப்பாளர்கள் தொழிற் சங்கம்) என்போரும் அடங்குவர்.

இதற்கு ஆதரவாக அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இடதுசாரி அமைப்புக்களின் அங்கத்தினர்கள் ஆதரவாளர்களும் கையொடபம் இட்டுள்ளனா,

இந்த அபிவிருத்திகளால் கிலியடைந்த இலங்கை முதலாளித்துவ அரசின் ‘டெயிலி நியூஸ்’ (11-2-1989) பத்திரிகை முதல் பக்கத்தில் ஜே.வீ.பி.க்கு எதிராக ட்ரொட்ஸ்கிஸ்டுகள் உலக தொழிற் சங்க இயக்கத்தை அணிதிரட்டுகின்றுர்கள்’ என்ற தலைப்பில் செய்தி வெளிவரும் அரச தாக்குதல்களுக்கு எதிரானது என்பதை அச் செய்தி முழுப்படியே மூடி மறைத்திருந்தது.

தொழிலாள வர்க்க கட்சிகள், அமைப்புக்களுக்கு இடையேயான வேலைத்திட்ட முரண்பாடுகளை பொருட்படுத்தாது சகல தொழிலாளவர்க்க அமைப்புக்களதும் ஐக்கிய முன்னணி உருவாவது சம்பந்தமாக முதலாளி வர்க்கத்தினது வீதியும் குரோதமும் வளர்ச்சி பெறத் தொடங்கி உள்ளது. ஏனெனில் அத்தகைய ஒரு முன்னணி அரசினதும், பாசிஸ்டுகளதும் தாக்குதல்களுக்கு எதிரான பலத்த எதிர்த் தாக்குதலாக அமையும் என்பதை வர்க்க எதிரிகள் அறிவர்.

இந்த ஐக்கிய முன்னணி பிரச்சாரத்துக்கு புதுத் தெம்பு வழங்கும் விதத்தில் இலங்கை உள்நாட்டு இறைவரி சேவைச் சங்கத்தின் செயற்குழு இந்த ஐக்கிய முன்னணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ள

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஆதரவினைத் தொடர்து அரசாங்க துறையைச் சேர்ந்த முக்கிய மலம் வாய்ந்த சங்கமான மேற்படி சங்கத்தின் ஆதரவு தொழிலாள வர்க்கப் போராளிகளுக்கு புதுத் தெம்பினை அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதே சமயம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஜனவரி 28ம் திகதிய செயற் குழுக் கூட்டம் யூ. என். பி. அரசாங்கய் இராணுவ – பொலிஸ் – கூலிப் படைகளுக்கும் மக்கள் விடுதலை தன்னணியின் பாசிச தாக்குதல்களுக்கு எதிராக சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களதும் ஐக்கிய முன்னணிக்காகப் பிரச்சாரம் செய்யவேண்டும் என திர்மானித்துள்ளது.

புதிய ஜனாதிபதி பிரேமதாசவின் கீழ் யூ.என்.பி. அரசாங்கம் உக்கிரமாக்கிவரும் தாக்குதல்களுக்கும், ம.வி.மு. பாசிச தாக்குதல்களுக்கும் பதிலடி கொடுக்க இந்த ஐக்கிய

# ஐக்கிய முன்னணிக்கு அழைப்பு...

1ம் பக்கத் தொடர்ச்சி

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதங்கள், கட்டுரைகள் மூலம் இலங்கை தொழிலாள வர்க்கம் யூ.என்.பி. அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும், சிங்கள இனவாத ஜே.வீ.பி.யினதும் கூட்டு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதை கண்டு கொள்ளலாம்.

“தொழிலாளர்களின் உரிமைகளை காக்கும் பொது இலக்கின் பேரில் அணிதிரள்வதற்கு எதிராக கட்சிகளதும் அமைப்புக்களதும் அரசியல் கருத்து வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டதால் 1930பதுகளில் ஜேர்மனியில் தொடங்கி அநேக நாடுகளில் தொழிலாள வர்க்கம் பெற்றுள்ள தீர்க்கமான அநுபவங்களினூல் ஐக்கிய முன்னணியை ஒழுங்கு செய்யும்படி கோரும் தீர்மானத்தினை நிறைவேற்று சபைகளையும் சம்மேளனத்திலும் நிறைவேற்றும்படியும் அத் தீர்மானத்தினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, இ.தொ.கா., ஜ.தொ.கா.வுக்கும் அறிவிக்கும்படியும் கோருகின்றேன்” என கோரும் கடிதத்தில் சோசலிச லேபர் லீக்கின் செயலாளர் தோழர். நிக் பீம்ஸ் கையொப்பமிட்டுள்ளார்.

சிட்னி நகரில் பெப்ரவரி முதல் வாரத்தில் கூடிய கைத்தொழில் தொழிலாளர்களின் கூட்டத்தில் சுல்லோரா பிராந்திய புகையிரத வேலை தள தொழிலாளர் தலைமை கமிட்டி இந்த பிரச்சாரத்துக்கு ஆதரவினை வழங்கிற்று. இந்த முக்கிய வேலைத்தளத்தில் சுமார் 2000 தொழிலாளர்கள் அழைக்கப்பட்டனர். அத்தோடு இச்சங்கம் இது சம்பந்தமாக விடயங்களைத் தெளிவுபடுத்தும் பொருட்டு எஸ்.எல்.எல்.பேராளர்களையும் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்துள்ளது.

இதுவரை இந்த ஐக்கிய முன்னணி அழைப்புக்கு ஆதரவாக கையெழுத்திட்டவர்களுள் சமஷ்டி தொழிற் கட்சி அங்கத்தவர்களான லூவி கென்ட், செனட்டர் ஒலிவ் சகாரோப் மூன்று பெரும் தேசிய தொழிற் சங்க தலைவர்களான பட் வலஹர் (அவுஸ்திரேலிய குளிரூட்டல் களஞ்சிய ஊழியர் சங்க செயலாளர்) நெயெரீன் நெட்லன்ட் (சமூக சேமநல இணைச் சங்கம்) கிரேக் றிச்சட் (பேக்கறி தொழிலாளர்கள், பிஸ்கட் தயாரிப்பாளர்கள் தொழிற் சங்கம்) என்போரும் அடங்குவர்.

இதற்கு ஆதரவாக அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இடதுசாரி அமைப்புக்களின் அங்கத்தினர்கள் ஆதரவாளர்களும் கையொப்பம் இட்டுள்ளனர்.

இந்த அபிவிருத்திகளால் கிலியடைந்த இலங்கை முதலாளித்துவ அரசின் ‘டெயிலி நியூஸ்’ (11-2-1989) பத்திரிகை முதல் பக்கத்தில் ஜே.வீ.பி.க்கு எதிராக ட்ரொட்ஸ்கிஸ்டுகள் உலக தொழிற் சங்க இயக்கத்தை அணிதிரட்டுகின்றுர்கள்’ என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டிருந்தது. அவுஸ்திரேலிய சோசலிஸ்ட் லேபர் லீக்கின் பிரச்சாரம் ஜே.வீ.பி.க்கு எதிரானது மட்டுமன்றி யூ.என்.பி. அரசாங்கம் தூண்டிவிட்டு வரும் அரச தாக்குதல்களுக்கு எதிரானது என்பதை அச்செய்தி முழுப்படியே மூடி மறைத்திருந்தது.

தொழிலாள வர்க்க கட்சிகள், அமைப்புக்களுக்கு இடையேயான வேலைத்திட்ட முரண்பாடுகளை பொருட்படுத்தாது சகல தொழிலாளவர்க்க அமைப்புக்களதும் ஐக்கிய முன்னணி உருவாவது சம்பந்தமாக முதலாளி வர்க்கத்தினது வீதியும் குரோதமும் வளர்ச்சி பெறத் தொடங்கி உள்ளது. ஏனெனில் அத்தகைய ஒரு முன்னணி அரசினதும், பாசிஸ்டுகளதும் தாக்குதல்களுக்கு எதிரான பலத்த எதிர்த் தாக்குதலாக அமையும் என்பதை வர்க்க எதிரிகள் அறிவர்.

இந்த ஐக்கிய முன்னணி பிரச்சாரத்துக்கு புதுத் தெம்பு வழங்கும் விதத்தில் இலங்கை உள்நாட்டு இறைவரி சேவைச் சங்கத்தின் செயற் குழு இந்த ஐக்கிய முன்னணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதோடு இதன் நடைமுறைப் பிரச்சினைகள் பற்றி பு.க.க.வுடன் கலந்துரையாட தமது தயார் நிலையையும் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஆதரவினைத் தொடர்ந்து அரசாங்க துறையைச் சேர்ந்த முக்கியம்லம் வாய்ந்த சங்கமான மேற்படி சங்கத்தின் ஆதரவு தொழிலாள வர்க்கப் போராளிகளுக்கு புதுத் தெம்பினை அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதே சமயம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஜனவரி 28ம் திகதிய செயற் குழுக் கூட்டம் யூ. என். பி. அரசாங்கய் இராணுவ – பொலிஸ் – கூலிப் படைகளுக்கும் மக்கள் விடுதலை தன்னணியின் பாசிச தாக்குதல்களுக்கு எதிராக சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களதும் ஐக்கிய முன்னணிக்காகப் பிரச்சாரம் செய்யவேண்டும் என தீர்மானித்துள்ளது.

புதிய ஜனாதிபதி பிரேமதாசவின் கீழ் யூ.என்.பி. அரசாங்கம் உக்கிரமாக்கிவரும் தாக்குதல்களுக்கும், ம.வி.மு. பாசிச தாக்குதல்களுக்கும் பதிலடி கொடுக்க இந்த ஐக்கிய முன்னணி பிரச்சார இயக்கத்தினை சூழ அணிதிரளும்படி நாம் சகல தொழிற்சங்க போராளிகளையும் வேண்டுகின்றோம்.

கொழும்பு — 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினுல் மஹரகம நாகஹவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.